உ

யாழ்ப்பாணம் திருநெல்வேலி

அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

## ஆலய வரலாறு



ஆக்கம்: வை. அநவரத விநாயகமூர்த்தி

ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182
50/2
Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி

# அருள் மிகு
# ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
# ஆலய வரலாறு

ஆசிரியர்:

வை. அநவரத விநாயகமூர்த்தி

வெளியீடு:

ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தேவஸ்தானம்
திருநெல்வேலி.

126279 SC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி

அருள் மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

தேவஸ்தான வெளியீடு

முதற் பதிப்பு- பவ வருஷம் மார்கழித் திருவாதிரை

விலை ரூபா : 50/-

பதிப்புரிமை : ஆசிரியருக்கு உரியது

அச்சுப் பதிப்பு: அபிநயா பதிப்பகம்
65/1, நாயன்மார் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

புகைப் படங்கள்: அம்புலி போட்டோ
நல்லூர், யாழ்ப்பாணம்.

SRI MUTHU MARI AMBAL AALAYA VARALARU

FIRST EDITION : DECEMBER, 1994

AUTHOR : V. ANAVARATHAVINAYAGA MOORTHY

PUBLISHRES SRI MUTHUMARI AMBAL DEVASTHANAM
THIRUNELVELY, JAFFNA

PRINTERS : ABHINAYA PATHIPPAKAM
65/1 NAYANMAR VEETHY
NALLUR - JAFFNA.

PRICE: RS 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ஆசியுரை | ... | i |
| அணிந்துரை | ... | iii |
| வாழ்த்துரை | ... | vi |
| அணிந்துரை | ... | viii |
| புனைந்துரை | ... | x |
| வெளியீட்டுரை | ... | xiii |
| முன்னுரை | ... | xvi |
| துதிப்பாடல்கள் | ... | 1 |
| 1. செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரும் திருநெல்வேலி | ... | 3 |
| 2. ஆலயத்தின் தோற்றமும் அமைப்பும் | | 6 |
| 3. சக்தி வழிபாடு | ... | 9 |
| 4. மூலமூர்த்தியின் அருட்பொலிவும் மகத்துவமும் | | 12 |
| 5. வழிபாட்டு மரபுகள் | ... | 15 |
| 6. திருவிழாச் சிறப்பு | ... | 18 |
| 7. மஹா கும்பாபிஷேகம் | ... | 33 |
| 8. அன்னை முத்துமாரியின் அருளாட்சி | | 36 |
| 9. திருப்பணிகள் | ... | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அம்பிகை அபிராமிப்பட்டருக்கு
அருள் புரிந்தமை ... 45
11. நாடு போற்றும் சக்திஉபாசகர் ... 49

# தேவி தோத்திரப் பாடல்கள்

அபிராமி அந்தாதி ... 52
ஸ்ரீ புவனேஸ்வரி தோத்திரம் ... 67
ஸ்ரீ துர்க்காதேவி தோத்திரம் ... 70
துர்க்கை துதி ... 71
ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம் ... 73
இலக்குமி துதி ... 75
சகல கலாவல்லி மாலை ... 77
சரஸ்வதி அந்தாதி ... 80
ஸ்ரீ முத்துமாரி அம்மன்
திருப்பொன்னூசல் ... 84
ஸ்ரீ முத்துமாரி அம்மன்
போற்றிப் பத்து ... 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே!

வெண்மையான ஆடை அணிந்தவரும், நன்மையைக் கொடுப்பவரும், சந்திரனுடைய நிறம் உடையவரும், நான்கு கைகள் உடையவரும், நல்ல காந்தி உடைய முகத்தை உடையவரும் எல்லா இடையூறுகளையும் நீக்குபவருமாகிய விநாயகரை தியானிக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

திருநெல்வேலி

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்



" அன்னை முத்துமாரி அம்மா
உன்பாதம் சரணம் அம்மா "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

**அன்பர்களுக்கு அம்பாள் அருள் பொலிக.**

வரலாறு வரைவது இலகுவான காரியமன்று. இதற்கு கல்வித் திறன், தளரா முயற்சி, உண்மைகளைத் தேர்ந்து தொகுத்தல், வரலாறு அறிந்த முதியோரை அணுகிச் செய்திகளைச் சேகரித்தல் ஆதியன வேண்டற்பாலது. அவ்வகையில் சைவப் பெரியார் திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள் யாழ். திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாற்றினைச் செம்மையுற யாத்துச் சைவ உலகுக்கு ஈந்துள்ளமை பாராட்டுக்குரியது.

இந்நூலில் அம்பாளின் அருள் மகத்துவம், அபிராமிப் பட்டருக்கு அருளியமை, தேவி தோத்திரப் பாடல்களையும் சேர்த்துள்ளார். எல்லோரும் எல்லாம் அறிந்துகொண்டவர்களல்ல. வரலாறுகள் நூல் வடிவில் இல்லாவிடில் முக்கியமாக வருங்காலச் சந்ததியினர் படித்து உண்மை நிலையை உணரவும், அருட்பேறு துய்த்து உய்வு பெறவும், வாய்ப்பு இல்லாதொழியும். இக்கருத்துக்களை எல்லாம் மனதிற்கொண்டு ஆசிரியர் பெருமுயற்சி மேற்கொண்டு இந்நூலினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடித்துள்ளார். அவர்களின் இன்னோரன்ன தொண்டுகள் மேன் மேலும் வளரவேண்டுமெனவும், அவர்கள் நலமே நீடு வாழ வேண்டுமெனவும், பராசக்தியின் பாதார விந்தங்களை உள மாரத் தியானித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்,**

தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

★★★

ஆலயங்கள் எமது பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை. வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு எம்மைக் காலங்காலமாக ஆலயங்களே நெறிப்படுத்தி வந்துள்ளன. அவை எமது மக்களின் சமய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன. யாழ்ப்பாணத்திலே கிராமந்தோறும் கோயில்கள் எழுந்து மக்களின் ஆன்மீக வாழ்வு சிறக்கப் பெருந்துணைபுரிந்து வந்துள்ளன. எனவே, ஆலய வரலாறு பேணிவைக்கப்படவேண்டியது அவசியமாகும். எமது பிரதேச சமய வரலாற்றை நாம் அறிந்துகொள்வதற்கு ஆலயங்களின் வரலாறுகள் சிறந்த பின்னணியாக அமைகின்றன

இலங்கையில் உள்ள சிறப்புப் பொருந்திய ஆலயங்கள் பலவற்றிற்குத் தலபுராணங்கள் எழுந்துள்ளன. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், திருக்கோணாசல புராணம், ஈழத்துச் சிதம்பர புராணம், நகுலேசுவர புராணம் திருக்கேதீசுவர புராணம் போன்றவை குறிப்பிடத் தகுந்தவை. இம்மரபுக்கிணங்க கிராமந் தோறும் உள்ள ஆலயங்களுக்கும் அவ்வப்போது நிகழும் விசேட தினங்களை யொட்டிப் பல வரலாற்று நூல்கள் வெளியிடப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம்.

பாடசாலைகளிலும், பல்கலைக்கழக நிலையிலும் இந்துப் பண்பாட்டைப் பயிலவிரும்பும் இளந்தலைமுறையினருக்கு இத்தகைய வரலாற்று நூல்கள் பெரும் வரப்பிரசாதமாகும். குறிப்பிட்ட கோயில் வரலாறு அக்கோயிலோடு தொடர்புடைய பல விடயங்களை விளக்கி நிற்கின்றமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. எமது பிரதேச பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்வதற்குத் துணைபுரியும் இத்தகைய கோயில் வரலாற்று நூல்களின் வரிசையில் 'திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்பாள் ஆலய வரலாறு' என்ற தலைப்பினையுடைய இந்நூலும் இடம்பெறுகின்றது.

இந்நூலின் ஆசிரியர் திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள் சைவத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாத்துவரும் அரும்பணியில் தம்மை இணைத்துக்கொண்டவர். பண்பட்ட அனுபவம் வாய்ந்த முதுபெரும் எழுத்தாளர். சமய நிறுவனங்கள் பலவற்றில் பொறுப்புக்களை ஏற்று சமயத்தொண்டு ஆற்றிய அநுபவம் மிக்கவர். 1978ம் ஆண்டு இவர் எழுதி வெளியிட்ட 'நக்கீரர் தந்த நன்முருகாற்றுப்படை' என்ற நூல் இவரது சிறந்த எழுத்தாற்றலுக்கும் சமயப் புலமைக்கும் உரைகல்லாக அமைந்ததோடு இவருக்கு எழுத்துலகில் புகழையும் பெற்றுத்தந்தது. அவ்வப்போது சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் இலக்கியம், சமயம் சார்ந்த கட்டுரைகளை எழுதி வந்துள்ளார்.

இவர் வாழும் கிராமமாகிய திருநெல்வேலி, கோயில்கள் பலகொண்ட கிராமமாகும். அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன், பழைமையும் புகழுங்கொண்ட திருநெல்வேலி சிவன் கோயிலுக்கு வடக்கே கோயில்கொண்டெழுந்தருளி அருளாட்சி புரிகின்றாள். இவ்வாலய வரலாற்றில் ஆசிரியர் ஆலயத்தோடு தொடர்புடைய பல விடயங்களைத் தமக்கேயுரிய நடையில் தெளிவுடன் எடுத்துக்கூற முற்பட்டுள்ளார். கிராமத்தின் சிறப்பு, ஆலயத்தின் தோற்றமும் அமைப்பும், சக்தி வழிபாட்டின் மகத்துவம், மூல மூர்த்தியின் அருட்பொலிவும் மகத்துவமும், வழிபாட்டு மரபுகள், திருவிழாச் சிறப்பு, கும்பாபிஷேகச் சிறப்பு, அன்னை முத்துமாரியின் அருளாட்சி, திருப்பணிகள், சிவாசாரியார் வரலாறு மற்றும் அம்பிகையின் புகழ்கூறும் தோத்திரப் பாடற்றொகுதி போன்ற அம்சங்களைத் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது. ஆசிரியரின் இம்முயற்சி வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் இக்கைங்கரியத்தினுல் ஆலயத்தில் அமையவிருக்கும் திருப்பணிகளில் ஒன்ருகிய இராஜகோபுரம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் மக்கள் நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டுள்ளது. ஆலயத்தின் தூலலிங்கமாகவிளங்கும் கோபுரம், சிறப்புற அமைய அம்பாள் அருள் அடியவர்களுக்குக் கிட்டியுள்ள சிறப்பைப ஆசிரியர் இந்நூலில் எடுத்துக் கூறுகின்ருர். இந் நூலின் இறுதியில் அமையும் தோத்திரத் திரட்டு, அடியவர்கள் அம்பிகை வழிபாட்டில் ஈடுபடவும், தோத்திரங்கள் பாடி தமது சமய வாழ்வைச் செப்பனிடவும், பெருந்துணை புரியும் எனக் கூறின் மிகையில்லை. இந் நூலைச் சைவ உலகம் மனமுவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை

அம்பிகையின் அருளுக்குப் பாத்திரராக விளங்கும் திரு. வை. அநவரத விநாயகமூர்த்தியின் இச்சீரியபணி, மேலும் தொடரவேண்டும் என்பதே எமது பெருவிருப்பமாகும். இவரது தொண்டுகள் சகலநிலைகளிலும் சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் திருவருள் பொலிவதாகுக!

சுபம்

**ப. கோபாலகிருஷ்ணன்**

இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை.

**பேராசிரியர் வி. க. கணேசலிங்கம்**
தலைவர், விலங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

★★★

மனிதனும் அவனுடைய சூழலிலுள்ள ஏனைய ஜீவ ராசிகளும் ஆண்டாண்டு தோறும் இவ்வுலகில் வாழ்ந்து வரினும் அவற்றின் ஆரம்பம் வளர்ச்சி சரித்திரம் ஆகியன இன்னமும் முற்றாகத் தெரியவரவில்லை. சரியான தகவல்கள் இல்லாததுதான் இதற்குக் காரணமாகும். இதேபோல ஊர்கள், கோயில்கள் மற்றும் பெயர் பெற்ற தலங்களின் வரலாறு சம்பந்தமான முடிபுகள் சரியாக இன்னமும் எமக்குத் தெரியாமல் இருக்கிறது. இவற்றை எழுத்துருவில் வைத்திருக்காமல் விட்டுவிட்டோம்.

கோயில்கள் ஒரு சமுதாயத்தின் இயல்புகளைப் பிரதி பலிப்பனவாகும். சமயம், மொழி, கலை, கலாச்சாரம் ஆகியன எமது வாழ்வில் இன்றியமையாத அம்சங்களாகும். இவற்றையெல்லாம் கட்டிக்காத்துநிற்பன எமது வழிபாட்டுத் தலங்களே. ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களினதும் ஆரம்பம், வளர்ச்சி, சரித்திரம் ஆகியவை எழுத்துருவில் ஆக்கப்படுவது எமது எதிர்காலச் சந்ததியாருக்கு நாம் செய்யும் கடமையாகும்.

ஆலயங்களைப்பற்றிய அடிப்படைத் தரவுகளையும், வழிபாட்டுமுறைகளையும், பல்வேறு திருவிழாக்களின் சிறப்புக்களையும், ஆலய அருளாட்சியையும், இன்னோரன்ன பல தரவுகளையும் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறுவது நாம் செய்யும் நன்மைகளில் முக்கியமான ஒன்றாகும். இது, போற்றுதற்குரியது; வரவேற்கத்தக்கது. இது, எல்லோருக்கும் கிடைக்கும் பெறுபேறல்ல. ஆண்டவன் அடியார்களுக்கே இது கிடைக்கும் பாக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையிலே இந்நூலின் ஆசிரியர் திரு: வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழுகிறார். திறமை, அறிவு, அருள், அன்பு ஆதரவு, பண்பு ஆகியன கொண்டுவாழ்வதனால் இந்நூலைத் தயாரித்து நமக்காக அர்ப்பணித்துள்ளார், சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு குடும்பத்தில் உதித்த ஆசிரியர் அவர்கள் தமது சிறந்த வாழ்க்கையோடு மட்டும் நில்லாது, அரும்பெரும் நூல்களைக் கசடறக் கற்று, தனது அறிவை மேம்படுத்தியதோடு அதனை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்வதில் சிறப்படைகிறார்.

திருநெல்வேலியின் சிறப்புக்களையும் அங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாளின் அருமை பெருமைகளையும் சரித்திர சம்பந்தமான தரவுகளையும், ஆலயத் தோற்றத்தையும், அதன் மகிமையையும் அன்பு சொரிய எமக்கு அள்ளித்தருகிறார். ஆலய வழிபாட்டு மரபுகள் அதோடு சம்பந்தப்பட்ட திருவிழாச் சிறப்புக்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதோடு அன்னை முத்துமாரி அம்பாளின் அருளையும் அதன் திருப்பணிச் சிறப்புக்களையும் தொகுத்துத் தந்துள்ளார். அம்பிகையின் அன்பையும் அருளையும் தனது உளமுருகும் மொழியில் வடித்துத் தந்துள்ளார். இவற்றை வாசிப்பதே ஒரு பேரானந்தமாக இருக்கிறது.

“அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு.”

என்பது குறள்கூறும் உண்மையாகும். மனிதராகப் பிறக்கும் யாவரும் அருள் பெறவேண்டியவர்களாவோம் இந்நூல் அருள்நெறியைக் காட்டும் ஒரு வழிகாட்டியாகும்

இதனை ஆக்கியவர் அருள் பெற்றவராவர்;
இதனைக் கற்பவர்கள் அருள் பெறுவார்களாக.

வி. க. கணேசலிங்கம்.

பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

**கலாநிதி இ. பாலசுந்தரம்**

சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்-பல்கலைக்கழகம்

ஈழத்திருநாட்டின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வரலாற்றுப் பழமை மிக்க ஆலயங்கள் பல அமைந்துள்ளன. வல்லிபுரம், நாகர்கோயில், பொன்னாலை, நயினாதீவு, காரைநகர் முதலான இடங்களிலுள்ள கோயில்கள் இதற்குச் சான்றுபகரும். கோயில் வரலாறுகள் பிரதேச வரலாறாக அமைதலுமுண்டு. அதனால் கோயில் வரலாறுகள் எழுதப்பட வேண்டியது அவசியமாகின்றது.

தமிழர் வரலாறு வரன்முறையாக எழுதப்படவில்லை. குறிப்பாக ஈழத்தமிழரது வரலாறு எழுதிவைக்கப்படாமையின் அவலத்தை இன்று நாம் அனைவரும் அனுபவிக்கின்றோம். வரலாற்றின் மூலமே உரிமையும் ஆட்சியும் பெறமுடியும். எனவே கோயில் பரிபாலகர்கள் தத்தம் கோயில்களின் வரலாறுகளை எழுதிவைக்க முனைய வேண்டும்.

தமிழகத்திலேயுள்ள பெரும்பான்மையான பெருங்கோயில்களுக்கு வரலாறு கூறும் தலபுராணங்கள் பாடப்பட்டுள்ளன. ஈழத்தில் தலபுராணமுடைய கோயில்கள் மிகச் சிலவேயாகும்.

கோயில் வரலாற்றில் அக்கோயிலைச் சூழவுள்ள சமூக வரலாறும் பின்னிப்பிணைந்திருத்தல் இயல்பாகும். கோயிற்பணி புரியும் கலைஞர்கள், சிற்பிகள், கோயிற் பரிபாலகர், அர்ச்சகர் முதலானோரது வரலாறும் அக்கோயிலுடன் தொடர்புடைய பொருளாதார வளந் தரும் நன்செய் புன்செய் நிலங்களின் விபரங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் வரலாற்றின் மூலமே பெறப்படுவனவாகும். கோயில்கள் சமூகத்தைப் புரப்பவை. கோயில்களை மையமாகக் கொண்டு சமூகங்கள் வளர்ந்தமையைத் தமிழர் பண்பாடு விளக்குகின்றது.

ஒவ்வொரு கோயிலதும் பூசை நடைமுறைகள் தனித்தனியான வை. அவ்வக் கோயில்களின் மூலமூர்த்தி, பரிவாரதேவதைகள் கட்டிடங்கள் முதலானவற்றின் விளக்கங்களும் அறியப்பட வேண்டியனவாகும். இவற்றைக் கட்டியோர், பராமரித்தோர், உபயகாரர் முதலான விடயங்களும் எழுதிவைக்கப்பட வேண்டியனவாகும்.

திரு.வை. அநவரதவிநாயகமூர்த்தி சிறந்த எழுத்தாளர், சமய விடயங்கள் பற்றி எழுதிய மூத்த எழுத்தாளர் வரிசையில் இடம்பெறுபவர். 1978இல் இவர் எழுதி வெளியிட்ட "நக்கீரர் தந்த நன்முருகாற்றுப்படை" என்ற நூல் இவரது எழுத்தாற்றலையும் பரந்த இலக்கியப் புலமையையும் எடுத்துக் காட்டுவதாகும். கடவுள் பக்தியும் சமய அனுட்டானமும் மிக்க இந் நூலாசிரியர் தாம் வாழும் கிராமத்திலுள்ள திருநெல்வேலி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம் பற்றிய பல்வேறு விடயங்களை தேடித்திரட்டித் தொகுத்து நூலாக எழுதியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய நன் முயற்சியாகும். அம்மன் வழிபாட்டு முறைகள், சத்தி வழிபாட்டின் சிறப்பு கும்பாபிஷேகம் முதலான விடயங்களும் ஆலய வரலாறும் இந் நூலிற் சிறப்பாக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. இதுபோன்று எம் பிரதேசத்திலுள்ள கோயில் வரலாறுகள் ஆராயப்பட்டு நூலாக வெளிவர வேண்டும் என்பதே எமது விருப்பம்.

இ. பாலசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
யாழ்ப்பாணம் – திருநெல்வேலி

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாற்று நூலின்

# புனைந்துரை

[வண்ணை. நாவலர் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் – தர்மகர்த்தா, இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபைத் தலைவர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத் தலைவர், வித்துவான் – பண்டிதர் – சைவப்புலவர் – சங்கீத கலா வித்தகர், இணுவையூர் இ. திருநாவுக்கரசு அவர்கள்.]

தேனினுமினிய செந்தமிழும் சிவநெறியும் வாழையடி வாழையாக வளர்த்த பண்பாடு நிறைந்த பெருமரபில் வந்தவர்; இணுவையூரைப் பிறந்தகமாகக்கொண்ட மூதறிஞர் எழுத்தாளராகத் திகழ்பவர் திரு. வை. அநவரத விநாயக மூர்த்தி அவர்கள், திருநெல்வேலிப் பதியைப் புக்ககமாகக் கொண்டுள்ளவர். மனைத்தக்க மாண்புடைய ஆசிரியை திருமதி அ. சிவயோகம் அவர்களின் அன்புக் கணவராக உள்ளவர். தணிகைப் புராண உரையாசிரியர், சூளாமணி வசன நூலாசிரியரான மகாவித்துவான் பொ. அம்பிகைபாகரின் இளைய பேரனார். இணுவைக் கல்யாண வேலவர் திருவூஞ்சல் நூலாசிரியரும், இயற்றமிழ் ஆசிரியருமான திரு. அ. க. வைத்தியலிங்க பிள்ளை அவர்கள் இளைய மைந்தன். இலங்கை கல்வி அமைச்சு இந்து மன்றத் தலைவராக இருந்து, அகில இலங்கையிலும் சைவமும் தமிழும் வளர்க்க உழைத்தவர். தமிழ்நாடு புகழ் 'உதயம்'பத்திராதிபராக இதயபூர்வமாகப்பணி புரிந்தவர் கல்வி அமைச்சு இந்து மன்றத்தின் வெளியீடுகளாகிய 'கல்விச்செல்வி, 'நவராத்திரியும் கலைமகள் வழிபாடும் 'நக்கீரர் தந்த நன் முருகாற்றுப் படை' ஆகிய நூல்களின் ஆசிரியர். அம்மட்டோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு S. S. C. பாடநூலாகிய 'திரிவேணித் தமிழ்ச் செல்வம்' என்னும் வித்துவான் வே. மு. வேணுகோபால பிள்ளை அவர்களை நூலாசிரியராகக்கொண்ட பாடநூலில் ஈழத்தில் மூத்த எழுத்தாளர் வரிசையில் கௌரவ சு. நடேசபிள்ளை அவர்கள் எழுதிய 'கடல் கடந்த தமிழ்' என்ற கட்டுரைக்கு இணையாக 'நயம்படவுரை' என்ற தலைப்பில் கட்டுரை வரைந்து தமிழ்நாட்டு அறிஞர்கள் மட்டுமல்லாமல் மாணவ சமுதாயத்தாலும் நன்கு மதிக்கப்பட்ட மூத்த எழுத்தாளர் திரு. வை. அநவரத விநாயக மூர்த்தி அவர்கள்.

மரபு திரியாத செந்தமிழ் நடையும், சிவநெறியும் அவரது படைப்புக்களில் இயல்பாக அமைந்துள்ளமை படிப்போருக்கு நன்கு புலனாகும். உலகத் தமிழ் எழுத்தாளர்கள் என்ற ஆங்கிலப் பிரசுரத்தில் இவர் பெருமை ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டமையும், குறிப்பிடத்தக்கது. தனது வாழ்வில் அல்லும் பகலும் அநவரதமும் வழிபாடுசெய்துவந்த இணுவில் பரராசசேகரப் பிள்ளையார், இணுவில் கந்தசுவாமி ஆலயங்களில் கொண்டுள்ள பக்திபோலத் திருநெல்வேலியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளைத் தினந்தோறும் வழிபாடாற்றிவந்த உழுவல் அன்பினால் அம்பிகையின் வரலாறு, மகிமை, பெருமை, சிறப்புக்களைப் பாரம்பரிய உணர்வோடு வருங்காலச் சந்ததியினரும் கற்று, அன்னையின் திருவருட் பேற்றிற் கலந்து, தான் பெற்றஇன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெருவிருப்பால் இவ்வரலாற்று நூலைப் படைத்து வெளியிட உள்ளங்கொண்டார். அம்பிகையின் அருளால் அதிட்டிக்கப்பட்டு வெளிவரும் இவ்வரலாற்று நூல், தல புராணங்களின் வரிசையில் வைத்துக் கணிக்கப்படுதற்குரியது. மேலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பணியும், தமிழ்ப் பணியும் உணர்ந்து மரபு பேணிவந்த பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு அணுக்கத் தெய்வீக அன்பராய் வாழ்ந்த பெருமையும், திருநெல்வேலி கலை இலக்கிய சனசமூக கிராமஅபிவிருத்திகளுக்கு அனுசரணையாளராகவும் இருந்து முன்னோடியாகத் திகழ்ந்த திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் மரபில் வந்த மெய்யன்பர்களின் முழு அன்புக்கும் பாத்திரமாக உள்ளவர் இந்நூலாசிரியராகிய திரு. வை. அநவரத விநாயக மூர்த்தி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பேரனார் எனது தந்தைக்கு ஆசிரியர். இவரது தந்தையார் எனக்கு வித்தியா குருவாகவுள்ளவர். இவர் என்னோடு தந்தையிடம் கல்வி கற்றவர். தன்னாசிரியன், தன்னோடு கற்றோன் ஆகிய வரிசையில், இவர் கட்டுரைக்குப் புனைந்துரை செய்யும் இலக்கணமரபில் எனக்குரித்துண்டு. ஆகவேதான் இவரது எழுத்துப் பணியும், வரலாற்றுப் பணியும் தமிழ் கூறும் சைவ நன் மக்களால் போற்றிப் பாராட்டப்படக்கூடிய தகுதியுடையதென்றும், அவரது சைவப்பணியும், தமிழ்ப்பணியும் மேலும் மேலும் சிறக்க இணுவை விநாயகர், முருகன் திருவருளோடு முத்துமாரி அம்பாளின் கருணையும் துணைநிற்குமாறு வழுத்தி இப்புனைந்துரையை அன்பும் உரிமையும் கொண்டு உதவி, ஆசீர்வதிக்கிறேன்.

வணக்கம்.

இங்ஙனம்,

வித்துவான் இ. திருநாவுக்கரசு

இணுவையூர்,
ஸ்ரீமுக வருஷம் பங்குனித் திங்கள் ௧ ம் நாள்
1994-03-15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை



# வெளியீட்டுரை

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமைகளோடும் சிறந்து விளங்குவது திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம். தொன்மையும் பெருமையும் வாய்க்கப்பெற்ற இவ் ஆலயத்தின் வரலாற்றினை, மூதறிஞரும், சைவப் பெரியாருமான திரு.வை. அநவரத விநாயகமூர்த்தி அவர்கள் விரிவாக ஆராய்ந்து இனிய தமிழில் திறம்பட எழுதி சைவ உலகுக்கு அளித்துள்ளார்கள். அம்பாள் அடியாரான இப்பெரியாரின் அரும் பெரும் பணி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தோடு நீண்டகாலத் தொடர்புடையவர் திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள். இந்த ஆலயத்தின் வளர்ச்சியிலும் அதன் சிறப்பிலும் பெரிதும் ஈடுபாடுடையவர். எமது தந்தையார் அமரர் சிவலோகநாதக் குருக்கள் அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர் வாயிலாக ஆலயம் சம்பந்தமான முக்கிய விஷயங்களைக் கேட்டறிந்தவர், மேலும் இவ்வாலயத்தில் நடைபெறும் நித்தியபூசை, வழிபாடு மற்றும் விசேட தினங்களில் நிகழும் கிரியைகள், திருவிழாக்களில் எல்லாம் பங்குபற்றி அங்கு நடைபெறும் கிரியைகள் யாவற்றையும் நன்கு

12629 SC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கும் வழக்கமுடையவர். சிறந்த எழுத்தாற்றல் படைத்தவர். எனவே, ஆலய வரலாற்றினை எழுதும் பணிக்கு இவை தூண்டுகோலாக அமைந்தன என்று கூறின் மிகையாகாது.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு அழகிய சித்திரத் தேர் ஒன்று உருவாகி வரும் வேளையில் ஆலயத்தின் பெருமையைக்கூறும் இந்த நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானதே. அத்துடன் இந்த நூல் விற்பனையால் வரும் நிதி இராஜகோபுரத் திருப்பணிக்கே பயன்படுத்தப்படும் அடுத்து வரும் ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டிய இந்த இரண்டு முக்கிய திருப்பணிகளைப்பற்றியும் ஆசிரியர் இந்த நூலில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அம்பாளின் அடியார்களும் மற்றும் பண வசதி படைத்த அன்பர்களும் முன்வந்து தாராளமாக உதவினுல் இந்த இரண்டு திருப்பணிகளையும் கூடிய விரைவில் அம்பாளின் துணையுடன் நிறைவேற்ற முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிருர் ஆசிரியர்.

இந்த நூலுக்கு ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீனம் இரண்டாவது குரு மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளுக்கும், அணிந்துரைகள் வழங்கிய யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், பேராசிரியர் வி. க. கணேசலிங்கம், கலாநிதி இ. பாலசுந்தரம், புனைந்துரை வழங்கிய வித்துவான், சைவப்புலவர், பண்டிதர் இ. திருநாவுக்கரசு அவர்களுக்கும் தேவஸ்தானத்தின் சார்பில் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிருேம். மேலும், பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தின் வரலாற்று நூலை அச்சிடும் செலவை தாமாக முன்வந்து பொறுப்பேற்ற அன்பர்களுக்கும் அம்பாளின் அநுக்கிரகம் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாற்று நூலை அழகாக அச்சிட்டு உதவிய நல்லூர், அபிநயா பதிப்பகத்தினருக்கும் தேவஸ்தானத்தின் சார்பில் நன்றி கூறுகிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருட்பொலிவையும் மகத்துவத்தையும், அத்துடன் அன்னையின் அருளாட்சியையும் அழகாக எடுத்துக் கூறும் இந் நூலாசிரியர், சைவப் பெரியார் திரு. வை. அநவரத விநாயகமூர்த்தி அவர்களுக்கு அம்பிகையின் கடாட்சம் மேலும் பெருக வேண்டும் என்று வாழ்த்தி இந்த வெளியீட்டுரையை இனிது நிறைவு செய்து அமைகிறோம்

## நன்றி

சிவ. ஸ்ரீ சி. தேவராஜ ஐயர்
சிவ. ஸ்ரீ சி. இராஜேந்திரக்குருக்கள்
சிவ. ஸ்ரீ சி. இருபாகரக் குருக்கள்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை.

## விநாயக வணக்கம்



மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள்நீங்க
சிரந்தழுவு சைவ நெறி திருநீற்றின் ஒளிவிளங்க,
அரந்தை கெடப் புகலியர்கோன் அமுதசெயத் திரு
– முலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல் போற்றி.

நமது நாட்டில் சமயம், கலை, பண்பாடு ஆகியவற்றின் நிலைக்களனாக விளங்குவது ஆலயங்களே. இதனாற்றான் எமது சமய வாழ்விலே ஆலயங்கள் முக்கிய இடத்தை வகித்து வந்துள்ளன. அத்தகைய ஆலயங்களின்வரலாறுகள் விரிவாக ஆராயப்படவில்லை. அதன் ஆரம்பம், வளர்ச்சி என்பன எழுத்துருவில் ஆக்கப்பெற்றுப் பேணிப் பாதுகாக்கப்படாமையினால் எமது மக்களில் அநேகருக்குத் தத்தம் ஊரிலுள்ள ஆலயங்களின் வரலாறுகள் தெரிந்திருக்கவில்லை. இந்தக் குறையைப் போக்கவும், எமது எதிர்காலச் சந்ததியினரது நன்மை கருதியும் இந்த வரலாற்று நூலை அன்னை முத்துமாரியின் துணைகொண்டு எழுத ஆரம்பித்தேன். என்னுள்ளக் கோயிலில் நீங்காது உறைந்து நின்று கட்டுரைகளை எழுதவும், அவைகளைத் தொகுத்து நூலாக்கவும் அருள் சுரந்த அம்பிகையின் பாத கமலங்களை முதற்கண் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலைக் கடந்த ஆண்டிலே வெளியிடுவதற்கு முயற்சித்தேன். நாட்டில் அப்போது நிலவிய அமைதியற்ற சூழ்நிலையாலும் மற்றும் பல்வேறு கஷ்டங்களினாலும் எமது முயற்சி பலனளிக்கவில்லை. அன்னை முத்துமாரியிடமே பூரண நம்பிக்கை வைத்திருந்த அடியேனுக்கு, அந்த அன்புத் தாயிடம் எனது நிலைமையைச் சொல்லி வேண்டுதல்செய்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதனை உணர்ந்து, அந்தத் தேவியின் சந்நிதானத்தில் எனது கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டு வந்தேன். ஒரு நாள், சற்றும் எதிர்பாராத விதமாக தனது பெயர் மற்றும் விபரங்களைக் குறிப்பிட விரும்பாத அம்பாளின் அடியவர் ஒருவர் 5001/- ரூபாவுக்கு காசோலை ஒன்றை என்னிடம் தந்து, நூலை அச்சிடுவிக்கும் பணியை உடனே ஆரம்பிக்கும்படியும், மேலும் 5000 ரூபா அன்பளிப்பாகத் தருவதாகவும் வாக்களித்து அடியேனை உற்சாகப்படுத்தினர், அன்னை முத்துமாரியின் அருட் கருணையை வியந்தவண்ணம் நூலை அச்சேற்றும் பணியை ஆரம்பித்தேன். கருணையுள்ளம் படைத்த அம்பாளின் அடியார்கள் வேறு சிலரும் பணம் தந்து உதவினர். அவர்களது அன்பளிப்பு எமது அரும்பணிக்கு உரம் ஊட்டுவதாக அமைந்தது. இந்த அன்பு உள்ளங்களை நன்றி உணர்வுடன் வாழ்த்துகிறேன்.

இந்நூலுக்கு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் அடியேனது அன்பின் வேண்டுகோளை ஏற்று ஆசியுரை வழங்கியிருக்கிறார்கள். அத்துடன் சைவசாஸ்திரங்களில் துறைதோய்ந்த யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் மனமுவந்து அளித்த நல்லாசிகள் இந்நூலுக்கு சிறந்த அணிகலனாக அமைந்துள்ளன.

யாழ். பல்கலைக் கழக விலங்கியல் துறைத் தலைவர், பேராசிரியர் வி.க. கணேசலிங்கம் அவர்கள் எமது பேரன்பிற்கும் மதிப்புக்கு முரியவர். சிறந்த கல்விமான். அப்பெரியார் அன்புடன் அளித்த அணிந்துரை இந்நூலினை ஒருபடி உயர்த்தியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தமிழ்ப் புலமை சான்ற செம்மல். இப்பெரியார் மனமுவந்து வழங்கிய வாழ்த்துரை இந்நூலை வளம்படுத்துகிறது.

வித்துவான், சைவப்புலவர், பண்டிதர் இ. திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த சைவசமயப் பிரசாரகர். அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தலைவர். பல்வேறு சமயப் பணிகளுக்கும் மத்தியில் சிரமத்தைப் பாராது புனைந்துரை ஒன்றினை மனமுவந்து அளித்துள்ளார்.

இந்தப் பேரறிஞர்களுக்கு அடியேனது இதய பூர்வமான நன்றி என்றென்றும் உரித்தாகுக. இந்த வரலாற்று நூலின் விற்பனை மூலம் வரும் நிதி, ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய இராஜ கோபுரத் திருப்பணி வேலைகளுக்குப் பயன்படுத்தப் படும். எனவே, அம்பாளின் அடியார்கள் தாமாக முன்வந்து அன்பளிப்பைச் செலுத்தி நூலைப் பெற்றுக்கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மேலும் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் ஆதரவில் வெளிவரும் இந்நூலுக்கு வெளியீட்டுரை ஒன்றினை தந்து சிறப்பித்தமைக்கு அடியேனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய சிவாசாரியர்களான சிவ ஸ்ரீ சி. தேவராஜ ஐயர், சி. இராஜேந்திரக் குருக்கள், சி.கிருபாகரக் குருக்கள் ஆகியோருக்கும் அடியேனது உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

மிகவும் குறுகிய காலத்தில் நூலைப் பிழையற அச்சேற்றி யாவரும் போற்றும் வண்ணம் அழகாக அமைத்துத் தந்த நல்லூர், 'அபிநயா' பதிப்பகத்தாருக்கும், குறிப்பாக அதன் நிர்வாக இயக்குநர் திரு பா. ஜெகதீசன் அவர்களுக்கும் அடியேனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கிப் பாராயணம் பண்ணுவதற்கு வசதியாகத் தேவி தோத்திரப் பாடல்களையும் இந்த நூலின் இறுதியில் சேர்த்துள்ளோம். ஸ்ரீ முத்துமாரி அம்மன் மீது திருப்பொன்னூசலையும் போற்றிப் பத்தையும் இயற்றி இவ்விரண்டினையும் அம்பாளின் சந்நிதானத்தில் அரங்கேற்றி, தேவி தோத்திரப் பாடல்களுடன் சேர்த்துக்கொள்ள மனமுவந்து உதவிய எனது நண்பரும் பிரசித்த நொத்தாரிசுவுமான திரு. ச. தங்கமாமயிலோன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக இந்நூல் வெளிவருவதற்குப் பலவகையிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது அன்புத் துணைவியார் திருமதி அ. சிவயோகம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களுக்கும், ஏனைய அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த அன்பும் நன்றியும் உரித்தாகுக.

இந்த நற்பணியில் அடியேனை ஈடுபடுத்தி, இது சிறப்புடன் நிறைவேறும் வகையில் எமக்குத் தோன்ருத் துணையாய் இருந்த அன்னை முத்துமாரியின் திருவருட் கருணையை வியந்து போற்றுவதுடன் காலமெல்லாம் கண்ணின் இமைபோல எங்களைக் காத்து வரும் அந்த அன்னையின் பாதாரவிந்தங்களிலே இந்த நூலை அன்புக் காணிக்கையாக்குகிறேன்.

"ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங் குசமும் கருப்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்
- கில்லையே."

— அபிராமிப் பட்டர்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு, வை. அநவரதவிநாயகமூர்த்தி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் வணக்கம்



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்தமா நிலத்தே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக குணமொரு மூன்றும்
திருந்துசாத் விகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சத் தலையாதே
பரமகுரு வருணினைந்திட் டுணர்வாயே
பரவுதரி சனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை உதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாக ஆலயத்தின் வளர்ச்சிக்கு அரும் பணிபுரிந்த (அமரர்) சிவாகம கிரியா பூஷணம்

**சிவ ஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# 1. செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரும் திருநெல்வேலி

நமது ஈழநாடு பழம்பெரும் நாடு. இதிகாசங்களிலும் புராணங்களிலும் இலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் புகழ்வாய்ந்த நாடு. இந்தத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணக் குடாநாடாகும். சைவப் பெருமக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தத் தீபகற்பத்தில் சைவாலயங்கள் நிறைந்து விளங்கக் காணலாம் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற முதுரைக் கேற்ப ஆலயங்களை அண்டிய பகுதிகளிலே மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். இவ்வாறு சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் இரு கண்களாகப் பேணிப் பாதுகாத்துப் பெருமை பெற்று விளங்கும் கிராமங்களுள் ஒன்றாகத் திகழ்வது திருநெல்வேலி ஆகும்.

இக்கிராமத்துக்குத் தெய்வீகப் பொலிவைத் தருவது அங்கு காணப்படும் சைவ ஆலயங்களே. பிரசித்திபெற்ற சிவன் கோயில், முத்துமாரி அம்மன் கோயில், தலங்காவற் பிள்ளையார் கோயில், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம், அரசடி சிவகாமசுந்தரி அம்மன் கோயில், பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில், வாலை அம்மன் கோயில், கொன்றையடி வைரவர்கோயில், பல்கலைக்கழகத்துப் பார்வதி சமேத பரமேஸ்வரன் கோயில் முதலிய பெரிய கோயில்களும், சிறிய சிறிய வைரவ கோயில்களும் நிறைந்து இக்கிராமத்தை ஓர் புனிதப் பிரதேசமாக மிளிரச் செய்கின்றன.

சைவப் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது இக்கிராமம். இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ். பல்கலைக் கழகம் திருநெல்வேலியில் அமைந்திருப்பது இக்கிராமத்துக்கு ஒரு தனிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் சிறப்பையும் பெருமையையும் தேடித் தந்துள்ளது. அத்துடன், சைவப் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாப்ப தற்கும் அதன் வளர்ச்சிக்குமென இப்பல்கலைக் கழகத்தில் ''சைவ சித்தாந்த பீடம்'' என்று ஒரு தனிப் பீடம் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோரால் பெருமையுற்றதும் பழமை வாய்ந்த ஆலயங்கள் சிறந்து விளங்குவதும் சிவ நெறிச் செல்வர்களும், அறநெறிச் செல்வர்களும், கல்வி மான்களும், வணிகப்பெருமக்களும், கொடை வள்ளல் களும், நிறைந்துவிளங்கும் பேறுபெற்றது இக்கிராமம். செழுமையான மண்வளம் மிகுந்து காணப்படும் இக்கிரா மத்தில் வாழை, மா, பலா முதலிய கனிதரு மரங்களும், வானுயர வளர்ந்துள்ள பனை மரங்களும், தென்னை மரங்களும், மற்றும் பூஞ்சோலைகளும் காய்கறித் தோட் டங்களும் நிறைந்து இயற்கை அன்னையை அழகுபடுத்து கின்றன. இங்கு வாழ்கின்ற மக்கள் சைவப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவர்கள். ஆசார சீலம் நிரம்பப் பெற்றவர் கள்; கல்வி அறிவால் சிறந்து விளங்குபவர்கள், சுருங்கக் கூறின் செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரும் கிராமம் திருநெல்வேலி ஆகும்.

இக்கிராமத்துக்குத் திருநெல்வேலி என்னும் பெயர் வந்த வரலாற்றை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தமது ''இலங்கை இடப்பெயர் ஆய்வு'' என்னும் நூலில்:

''திரு + நெல் + வேலி = திருநெல்வேலி. தமிழகத்தி லுள்ள திருநெல்வேலிக் கிராமத்திலிருந்து வந்த மக்கள் இங்கு குடியேறியபோது இப்பெயரை இட்டு வழங்கினர் என்பது பழைய மரபு. வேலி – நில அளவைப் பெயர், வயற் பிரதேசம் அளக்கப்பட்டு இவ்வயல் கோயிலுக்கு உரியதாக இருந்தமையால் அல்லது கோயிலுக்குக் கொடுக் கப்பட்டமையால் 'திரு' என்ற அடையுடன் திருநெல்வேலி என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலியின் கிழக்கே குளமும் வயலும் காணப் படுகின்றன. தமிழகத்துத் திருநெல்வேலிச் சூழல்போன்றே இங்கும் புவி அமைப்பும் வளமும் செறிந்து காணப்படுத லால் ஒப்புவமை நோக்கியும் இப்பெயர் ஏற்பட்டிருக்க லாம்'' என்று நன்கு விளக்கிக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர்ப் பிரதேசச் செய லரின் நிர்வாகத்துக்குட்பட்ட இக்கிராமத்தில் நடுநாயக மாக விளங்குவது அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆல யம். பழைமை வாய்ந்ததும் புகழ்பெற்றதுமான திருநெல் வேலிச் சிவன் கோயிலுக்கு வடக்குப் பக்கமாக அமைந் துள்ள இந்த ஆலயம் இயற்கை எழிலும் தெய்வத் திரு வருட் பெருக்கமும் பெற்றுக் கிழக்கு நோக்கிய சந்நிதியு டன் விளங்குகிறது. அன்னை முத்துமாரியை மூல மூர்த்தி யாகக் கொண்டு சிறந்து விளங்கும் இவ்வாலயத்தில் அமை தியும் புனிதமும் நிலவி வருவது குறிப்பிடத்தக்க அம்ச மாகும். தூரத்தில் இருந்து அன்னையின் ஆலயத்தைக் காணும் பொழுதே மனப் பாரங்கள் எல்லாம் தானுகவே இறங்கிவிடுகின்றன. அழகும் அருளும் நிறைந்த இந்த ஆலய மண்ணை மிதித்ததுமே அந்த மாபெரும் சக்தியா கிய அன்னை முத்துமாரியின் உருவத்தைத் தவிர மற் றைய எண்ணங்கள் எல்லாம் பறந்தோடி விடுகின்றன.

இத்திருத்தலத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக் கும் அன்னை முத்துமாரி, தன்னை நம்பித் தஞ்சம் அடை பவர்களுக்கு அபயம் அளிக்கும் அருள் மாதாவாக விளங்கு கிறாள். தன் தண்ணளியைத் தங்குதடையின்றி எல்லோ ருக்கும் பொழிகின்றாள். தொன்மை மிக்க இத்திருப்பதி யின் சிறப்பும், இங்கு எழுந்தருளி அடியார்களுக்கு அருள் புரிந்துவரும் அன்னை முத்துமாரியின் பெருமையும் அள விட்டுரைக்க இயலாதன. அண்மைக் காலமாக இவ்வால யம் மிகவும் புகழ்பெற்று ஆயிரக் கணக்கான அடியார்கள் திரண்டு வந்து வழிபட்டு மகிழும் நிலையில் விரைவாக வும் வியக்கத்தக்க வகையிலும் பெரிதும் வளர்ந்தோங்கி நாளுக்குநாள் விரிவடைந்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஆலயத்தின் தோற்றமும் அமைப்பும்.

ஈழத்திலுள்ள பெருமைவாய்ந்த ஆலயங்களைப் போன்று இந்த ஸ்தலத்தின் பூர்வீகம் அதாவது அதனுடைய தோற்றம் சரித்திர ஆய்வுக்கு அப்பாற்பட்டதாக விளங்குகிறது. எனினும், போர்த்துக்கேயர் ஆலயங்களை அழிக்கும் செயலில் ஈடுபட்ட காலத்தில் இக்கோயிலும் அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும், அக்காலத்து மறைத்து வைக்கும் மரபுக் கேற்ப அம்பாள் கோயிலும் பனை ஓலையால் வேயப்பட்டு அடியார்களால் பேணப்பட்டு வந்தது எனவும் கருத இடமுண்டு. பின்னர் காலம் செல்லச்செல்ல செங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட ஆலயமாக விளங்கிப் படிப்படியாக வளர்ச்சிபெற்றுத் தற்போது உட்சுற்றுப் பிரகார மண்டபத் திருப்பணி வேலைகள் யாவும் நிறைவுபெற்றுப் புதுப் பொலிவுடன்திகழ்கிறது.


மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமைகளோடு சிறந்து விளங்கும் இத்திருப்பதி, முத்துமாரி அம்பாளை மூல மூர்த்தியாகக்கொண்டு கிழக்குப் பக்கம் நோக்கிய சந்நிதியாகச் சீர் பெற்று விளங்குகிறது. அமைதியும் தூய்மையும் பெற்று விளங்கும் இவ்வாலயத்தின் நுழைவாயில் முன்னல் பெரிய மண்டபம் உள்ளது. உற்சவ காலங்களில் அயற்கிராமங்களிலிருந்து வரும் அடியார்கள் சுவாமிதரிசனஞ்செய்து முடிந்ததும் இந்த மண்டபத்தில் இளைப்பாறிச் செல்வார்கள். பொங்கல், அன்னதானம், நடைபெறும் நாட்களில் மகேசுர பூசை இம்மண்டபத்தில்தான் இனிது நிறைவேறுகிறது. பொதுவாக ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கும் தன்மையை நோக்குமிடத்து உடம்பின் அமைப்பைப் போன்றதாகவே அவை அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனைத் திருமூலர் தமது திருமந்திரத்தில் பின்வரும் பாடலில் அழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி
அம்பாள் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]


"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே."

இவ்வாலயத்தின் அமைப்பை உற்று நோக்குமிடத்து அதில் பல உறுப்புக்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மூல விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இடம் விமானம் என்றும், அதன் மேற்கூரை ஸ்தூபி என்றும் வழங்கப்பட்டு வருகின்றது. ஸ்தூபியின் கீழ்க் காணப்படும் கருவறையைக் கர்ப்பக்கிருகம் என்றும் கூறுவதுண்டு இந்தக் கர்ப்பக் கிருகத்தை அடுத்து அர்த்த மண்டபமும், மகாமண்டபமும் மற்றும் வசந்தமண்டபம் வெளிமண்டபம் யாவும் ஒருங்கே அமையப்பெற்று அழகுறக் காட்சி தருகின்றது. விநாயகர், துர்க்கை, நாகேஸ்வரி, வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், வைரவர், சந்தான கோபாலர், சனீஸ்வரன், காத்தவராயர், சண்டேசுவரர் முதலிய பரிவார மூர்த்திகளும், அவற்றுக்குத் தனித்தனியே பரிவாரக் கோயில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பதி பசு பாசம் ஆகியவற்றை விளக்கும் கொடிமரம் நந்தி பலிபீடம் என்பன ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. வசந்த மண்டபம் அண்மையில் புதுப்பிக்கப்பட்டு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காட்சி அளிக்கிறது. யாகசாலை, பாகசாலை, வாகனசாலை, களஞ்சிய அறை யாவும் அமையப்பெற்று ஆலயம் சிறந்து விளங்குகின்றது. தேவசபை தெற்குநோக்கியவாறு காட்சி தருகின்றது. உற்சவ மூர்த்திகளான விநாயகர், அன்னை முத்துமாரி, துர்க்காதேவி, இலக்குமிதேவி, சரஸ்வதிதேவி, வள்ளி தெய்வயானை சமேதசுப்பிரமணியர், நாகேஸ்வரி, இராஜ இராஜேஸ்வரி, சந்தானகோபாலர் ஆகிய எழுந்தருளி மூர்த்தங்கள் இந்தத் தேவசபையில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர். கோயில்களில் துர்க்கையின் திருவுருவம் பெரும்பாலும் கருவறையின் வடக்குப் பக்கச் சுவரில் உள்ள மாடத்தில் காணப்படும். ஆனல் இங்கு உட்சுற்றுப் பிரகாரத்தில் வடபகுதியில் துர்க்கை அம்மனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் அமைக்கப்பட்டு வடக்கு வாயிலை நோக்கியபடி துர்க்கை அம்மன் வீற்றிருந்து அருள்பாலித்தவண்ணம் இருக்கிருள். தெற்கு, வடக்கு நுழைவாசல்களில் சிறிய மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காலக்கிரமத்தில் இந்த இரு வாசல்களிலும் சிறிய கோபுரங்கள் அமைப்ப தற்கு அன்னையின் அடியார்கள் திட்டம் வகுத்துள்ளனர். வைரவர் சந்நிதிக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட கண்டாமணிக் கோபுரம் நெடிதுயர்ந்து விளங்குகின்றது. இந்த ஆலயம் உள்வீதி, வெளிவீதி என இரண்டு சுற்றுப் பிரகாரங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. வீதிகள் யாவும் தூய்மையாக விளங்குகின்றன. உட்சுற்றுப் பிர காரச் சுவர்களில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் கண் களுக்குப் பெருவிருந்தாகின்றன. ஆலயத்தின் சுற்ருடல்க ளில் தெய்வமணம் கமழும். அத்துடன் அமைதியும் ஆனந் தமும் தவழ்ந்து வந்து மனநிறைவை எற்படுத்தும்.

சுருங்கக் கூறின், யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறப் புற்று விளங்கும் திருக்கோயில்களில் அன்னை முத்துமாரி அம்பாளின் ஆலயமும் பெருமைபெற்று முன்னணியில் திகழ்ந்து ஓங்கி வளர்ச்சி பெற்று வருகிறது. சீரும் சிறப்பும் பெற்ற இத்திருப்பதி அன்னையை நாடிவரும் அன்பர்க ளுக்கு என்றும் வாழ்வளிக்கும் புகலிடமாகத் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சக்தி வழிபாடு

சக்தி வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. வேத காலத்துக்கும் முற்பட்டது. சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய பண்டைய நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் இவ்வழிபாடு நிலவியதென்பதற்கு அங்கு நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சி சான்று பகர்கிறது. இவ்வுலகில் ஒவ்வொரு அணுவிலும் சக்தியின் பேராற்றல் விளங்குவதைக் காணலாம். இதனை நன்குணர்ந்துபோலும் நம்முன்னேர் இயற்கையின் எழிலில் இறைவனைக் கண்டு களித்தனர்.

சக்தி ஒன்றே: ஆனல் சக்தியின் திருநாமங்களோ பலவாகும். மகேஸ்வரி, மனேன்மணி, பர்வதவர்த்தனி, தையல்நாயகி, இராஜராஜேஸ்வரி, வாலாம்பிகை, அபிராமசுந்தரி, உமாதேவி, காமாட்சி, சிவகாமசுந்தரி, தடாதகைப்பிராட்டி, விசாலாட்சி, நீலாயதாட்சி, காளி, விஜயலட்சுமி, வீரலட்சுமி, தனலட்சுமி, காயத்திரி, சாவித்திரி துர்க்கை, முதலான பல திருநாமங்களைப் பெற்றுத் திருவருள் பாலிப்பாள்.

சக்தி எங்கும் எப்போதும் எதிலும் நிறைந்தவள். ஆகையால் அவளைப் பூரணி என்று போற்றுகிரேம். முத்தொழிலையும் செய்யும்போது அவளைப் பிரம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி, என்று வாழ்த்தி வணங்குகிரேம். ஈஸ்வரனுக்கு சமமாகும்போது அவளைத் துர்க்கை என்று போற்றித் துதிக்கிரேம். காலத்தையே வடிவாகக் கொள்ளும்போது காளி என்று அவளைக் கருதி வந்தனை செய்கிரேம்.

சக்தி தாய்மையின் சொருபமாக விளங்குபவள். பத்து மாதம் சுமந்து எம்மைப் பெற்றெடுத்துப் பரிவுடன் பேணி அன்பென்னும் அமுதினை ஊட்டி ஆதரவு நல்கி வளர்த்த எமது அருமைத் தாயாக நினைத்து அந்த மாபெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியைப் போற்றித் துதிக்க வேண்டும். அஞ்ஞான இருளை அகற்றும் ஞானம்பிகை அவளே. தாயாகிய ஞானம்பிகையைத் துர்க்கா பரமேஸ்வரி என்று வாயார வாழ்த்தி வணங்குவோமாக.

சக்தி, சிவத்தை அடைவதற்கு அனுக்கிரகிப்பவள். சிவஞானப் பேற்றை வாரிவழங்கும் சிறப்புத் தன்மையை நோக்கி இவளுக்கு 'சிவஞானப் பிரதாயிநீ' என்றேரு திரு நாமம் வழங்கப்பட்டு வருகிறது.

சக்தி சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாக விளங்குபவள். அமைதியான வாழ்க்கையையும் அளவில்லா ஆனந்தத்தையும் நமக்கு அருளும் அன்புத்தாயாக போற்றப்படுகின்றுள்.

இம்மையில் நல்வாழ்வையும் மறுமையில் முத்தியின்பத்தையும் தரவல்லது இந்தச் சக்தி வழிபாடே. இந்த வழிபாட்டைப் பக்தியுடன் மேற்கொண்ட அடியார்கள் பலர் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்ந்தனர் எனப் புராணங்கள் வாயிலாக அறிகிறோம்,

''எங்கெங்கு காணினுஞ் சக்தியடா அவள் எழுகடல் வண்ணமடா'' என்று கவிஞன் ஒருவன் தன்னையே மறந்து பாடியுள்ளான். உலகனைத்தையும் படைத்து உலகத்தின் ஒவ்வொரு அணுவிலும் உறைகின்ற அந்த மாபெரும் சக்தி, மதுரையில் மீனுட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், தஞ்சையில் முத்துமாரியாகவும், திருக்கடவூரில் அபிராமியாகவும் சமயபுரத்தில் கருமாரியாகவும், முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையாகவும், நயினுதீவில் நாகபூஷணியாகவும், தெல்லிப்பழையில் துர்க்கையாகவும், காரைதீவில் கண்ணகி அம்மனுகவும், திருநெல்வேலியில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளாகவும் இன்னும் இதேபோன்று பல்வேறு புண்ணிய தலங்களில் பல்வேறு நாமங்கள் தாங்கித் திருவருள் பாலித்து வருவதோடு நாட்டையும் மக்களையும் பாதுகாத்து வருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

மக்கள் கவிஞன் பாரதியும்.

"ஆதி சிவனுடைய சக்தி எங்கள்
அன்னை அருள்பெறுதல் முத்தி
மீதி உயிர் இருக்கும் போதே அதை
வெல்லல் சுகத்திற்கு யுக்தி" என்றும்,

மூர்த்திகள் மூன்றுள பொருளொன்று – அந்த
மூலப் பொருள் ஒளியின் குன்று
நேர்த்தி திகழும் அந்த ஒளியை – எந்த
நேரமும் போற்று சக்தி என்று" என்றும்

இவ்வாறு சக்தி வழிபாட்டின் மேன்மையை நன்கு விளக்கிப் போந்தார்.

அன்னையின் அருளில் திளைத்த தாயுமான சுவாமிகளும்,

"பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரயம்பகி எழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனோதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே
நான் உச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப் புகழ்
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்த மலை
வளர்காத லிப்பெண் உமையே!" என்று

அம்பிகையை வியந்து போற்றியுள்ளமையைப் படிக்குந்தோறும் இன்பம் பயப்பதோடு உள்ளத்தை இறைவிபால் ஈர்க்குந் தன்மையும் வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. மூல மூர்த்தியின் அருட்பொலிவும் மகத்துவமும்

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம் பொருளை – ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை – இன்பத் தாயாக – அன்னை பராசக்தியாகப் போற்றி வழி படும் மரபு நம்மக்களிடையே பண்டைக் காலம்தொடக் கம் நிலவி வருகிறது. உலகின் கண்ணேயுள்ள சராசரங்கள் தோறும் அழகின் அம்சமாக விளங்கும் அந்தப் பராசக் தியை, இவ்வாலயத்தில் அன்னை முத்துமாரியாகப் போற்றி மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்திலே அகில புவன மாதாவாகிய முத்துமாரி அம்பாள் ஞான சக்தி, வீரசக்தி யோகசக்தி ஆகிய முச்சக்திகளுக்கும் உறைவிடமாகவிரு ந்து, தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள்பாலித்த வண்ணம் வீற்றிருக்கிறாள். காலத்தையும் ஞாலத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் எமது அன்னையின் பாதாரவிந் தத்திலே ஸ்ரீசக்கரம் என்னும் மகிமைவாய்ந்த யந்திரம் வைத்துப் பூசிக்கப்படுவதை அடியார்கள் அவதானித்திருப் பார்கள். அம்பிகை எங்கும் எழுந்தருளித் திருவருள் பாலித்தாலும், சிறப்பாக வெளிப்பட்டு எழுந்தருளும் இடம் ஸ்ரீ சக்கரம். இந்த ஸ்ரீ சக்கரத்துக்கு மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று அந்திப் பொழுதில் அபிஷேகம் விசேட பூஜை, லலிதா சகஸ்திர நாமம் அர்ச்சனை என் பனவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆடிப் பூரம், அம்பாளுக்கு உகந்த தினம். அன்று அதி காலையில் ஸ்நானம் செய்து புத்தாடை புனைந்து திரு நெல்வேலியில் அருளாட்சி புரியும் அன்னை முத்துமாரி யைத் தரிசித்து அந்தத் தாயின் அருளைப் பெறுவதற்கு ஆலய வாசலை அணுகுகிறோம். நேரம் காலை 6 மணி 45 நிமிடம். காலைப் பூஜை ஆரம்பமாவதற்கு முன்னறி வித்தலாக ஆலய மணி ஒலிக்கிறது. காற்றில் மிதந்து வந்த அந்த ஒலியானது "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே'' என்ற அப்பர் தேவார வரிகளை நினைவூட்டியது. அருகில் உள்ள கிணற்றடியில் கால்களைக் கழுவிக்கொண்டு ஆலயத்தினுள் நுழைகிறோம். திரைச்சிலை விலகுகிறது. கருவறையினுள்ளே அன்னை முத்துமாரியின் அருட்கோலம் அந்த அடுக்குத் தீப ஒளியில் நன்கு தெரிகிறது. நான்கு திருக்கரங்களுடன் இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவைத்த வண்ணம் கிழக்குத் திசை நோக்கியபடி கொலு வீற்றிருக்கின்றாள் அந்தக் குவலயம் போற்றும் நாயகி. வலது பக்கத் திருக்கரங்களில் சூலமும் வாளும், இடது பக்கத் திருக்கரங்களில் டமருகமும் கபாலமும் ஏந்தியபடி அக்கினிச் சடாபாரத்துடன் விளங்கும் அன்னையின் திருக்கோலத்தின் அழகை வருணிக்க யாரால் முடியும். அந்தத் தெய்வீகக் காட்சியைக் கண்டு நமது உள்ளம் உருகுகின்றது.

ஒரு கணப்பொழுதில் மாரியம்மனின் திருக்கோலத்தை நன்கு சித்தரிக்கும் பின்வரும் பாடலும், அந்தக் தெய்வீகக் காட்சியும் நமது சிந்தையில் நிறைந்து என்றுமில்லாத ஆனந்த பரவச நிலையை ஏற்படுத்திவிடுகின்றது.

12629 SC

## மாரி அம்மன் தியானம்.

ஓம்

அருண மணி நிபாங்கம்
அக்நி கெசம் காண்டம்
டமரு தர சூலம்
கட்க கஸ்தம் கபாலம்
அனல நயன நாகம்
ஆசனம் பத்ம பீடெ
நிகில புவன தேவீம்
சீதளம் - மாரி ரூபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை முத்துமாரியையே கண்கண்ட தெய்வமாகப் போற்றி அவள் பாத கமலங்களை அன்புடன் பணிந்து வழி பாடுசெய்து வந்தவர்கள் அன்னையின் அருளால் தமது பிணிகள் நீங்கியும், கவலைகள் ஒழிந்தும், துன்பங்கள் அகன்றும், பற்பல நன்மைகளைப் பெற்றிருப்பதனுற்ருன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நாள்தோறும் பக்தர்கள் பலர் அன்னையை நாடி வருகின்ருர்கள். ஒரு முறை அன்னை முத்துமாரியின் தரிசனம் கிடைக்கப்பெற்றவர்கள் திரும்பத் திரும்ப அவளைத் தேடி வருவதோடு மற்றவர்களுக்கும் அவளின் திருக்கோலத்தின் எழிலையும், ஆலயத்தின் புனிதத்தையும் அங்கு நடைபெறும் நித்திய பூசைகளின் சிறப்பையும் எடுத்துக்கூறி வழிப்படுத்துகிருர்கள். அம்பாளின் தரிசனம் அப்படிப் பருகப் பருகத் திகட்டாத தெய்வீகத் தேனமிர்தம் எனறே கூறிவிடலாம்.

திருநெல்வேலியில் வாழ்கின்ற சைவப் பெருமக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படும தெய்வமாகத் திகழ்பவள் அன்னை முத்துமாரி. அன்னையின் திருநாமத்தை ஒருதரம் சொன்னுல் அடியார்களின் உள்ளமெல்லாம் உருகும். அன்பின் வடிவமான அன்னை முத்துமாரியை உள்ளன்புடன் பூசித்து வழிபடுபவர்களை வாழ்வில் எத்தகைய துன்பங்களும் அணுகமாட்டா, என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எனவே, அருள்விழிப் பார்வையோடு நம்மை ஆட்கொண்டருளும் அன்னை முத்துமாரியின் பாதாரவிந்தங்களை வணங்கி அவள் திருவருள் பெற்று உய்வோமாக.

" உலகத்து நாயகியே! எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
உன்பாதம் சரண் புகுந்தோம் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி! "

— பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

சிவாகம கிரியா பூஷணம்


சிவ ஸ்ரீ க. சிவலோக நாதக் குருக்கள்

அவர்களுடைய சிரேஷ்ட புத்திரன்

அமரர்

# சிவஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5. வழிபாட்டு மரபுகள்

நித்திய பூசையும், நைமித்திய பூசையும் முறையாகவும், காலம் தவறாமலும் நடைபெற்றுவருகின்ற ஆலயங்களில் இறைவன் திருவருள் நிறைந்து விளங்கும். நித்திய பூசை என்பது தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தை ஏற்படுத்திக்கொண்டு அக்காலத்தில் வழிபாட்டு முறையைச் செய்துவருதல். நைமித்திய பூசை என்பது, விநாயக சதுர்த்தி, திருவெம்பாவை, நவராத்திரி, வெள்ளிக்கிழமை ஆடிச் செவ்வாய், கார்த்திகை முதலிய விசேடதினங்களில் செய்யப்படும் பூசை, வழிபாடு உற்சவம் என்பனவாகும். இக்கோயிலில் தற்போது காலை, உச்சிக்காலம், சாயரட்சை, ஆகிய மூன்று நேரப் பூசைகளும் குறிப்பிட்ட நேரங்களில் நடைபெற்று வருகின்றன.

காலைப் பூசை தினந்தோறும் காலை 6.45 மணிக்கு நடைபெறும். அதிகாலையில் அம்பாளுக்கு அர்ச்சகர் திருமுழுக்காட்டிப் பட்டு வஸ்திரம் சாத்தி, ஆபரணங்கள் அணிவித்துப் பலவகைப் புஷ்பங்களினால் கட்டப்பட்ட மாலைகளைக்கொண்டு தேவியை நன்கு அலங்கரிப்பர். பின்னர் சந்தனத்திலும் குங்குமத்திலும் அம்பாளுக்கு நெற்றியில் திலகமிட்டுத் தீபங்கள் ஏற்றப்படும். அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாகிய அன்னை முத்துமாரியை ஆவாகனம் செய்து மலர்கள் தூவி தூப தீபங்கள் காட்டி, சோடச உபசாரத்துடன் பூசை நடைபெறும். காலைப் பூசையில், அம்பாளுக்குப் பாலும் தெளிதேனும் நைவேத்தியமாகப் படைக்கப்படுகின்றன. இறுதியில் கற்பூர நீராஞ்சனத்துடன் அம்பாளின் காலைப் பூசை இனிது நிறைவேறும் இவ்வாறு உச்சிக்காலப் பூசை பகல் 10½ மணிக்கும், சாயரட்சைப் பூசை மாலை 5½ மணிக்கும் கிரமமாக நடைபெறும். இந்த இரண்டு காலப் பூசைகளும் அம்பாளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் சகலவிதமான உபசாரங் களுடனும் நடைபெறும். ஆனால் காலைப் பூசையில் விநாய கருக்கும் அம்பாளுக்கும் துர்க்கை அம்மனுக்கும் முறை யாகப் பூசை நடைபெற்றுப் பிரசாதமும் அடியார்களுக்கு வழங்கப்படும். நாளாந்தம் இவ்வாறு பூசைகள் ஒழுங்கா கவும் சிறப்பாகவும் நடைபெற்று வருவதால் ஆலயத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசுவதைக் காணலாம். இங்கு நடை பெறும் பூசைமுறைகள் வழிபடுவோரைத் தெய்வபக்தியில் ஈடுபடுத்தும்.

அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயச் சிறப்பை எடுத் துக்கூறும் போது அன்னையின் சேவைக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்த அர்ச்சகர், குருக்கள் ஆகியோரைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதே. இவ்வாலயத்தில் நாளாந்தம் நடைபெறும் பூசைகள் மற்றும் கிரியைகள் யாவும் ஆகம விதிப்படி சிறப்பாக அமைவதற்கு அயராது உழைப்பவர்கள் இப்பெருந்தகைகளே ஆவர். தேவி யைத் தரிசிக்கச்செல்லும் அடியார்களின் நன் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவராக விளங்கும் இவர்கள் அன்பும் பண்பும் படைத்தவர்கள். ஒழுக்க சீலர்கள். வழி வழியா கத் தேவியை ஆராதனை செய்துவருபவர்கள்.

ஆலயம் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் நித்திய பூசைகளை நடத்திவந்த அர்ச்சகர் மற்றும் அபிஷேக ஆரா தனைகளுக்குப் பொறுப்பாகவிருந்த குருக்கள் யார், எவர் என்பதுபற்றி முழு விபரங்களும் அறியக்கூடியதாக இல்லை. இருந்தபோதிலும் 1987ம் ஆண்டில் அமரத்துவம் அடைந்த சிவலோகநாதக் குருக்கள் அவர்கள் தந்த விபரங்களின்படி, சைவக்குருக்கள் பரம்பரையினரே கோயிற் கிரியைகளுக் குப் பொறுப்பாக இருந்துவந்துள்ளனரென்றும், அவர்க ளுள் காசிப்பிள்ளை ஐயர், சிற்றம்பல ஐயர், முருகேசு ஐயர், கந்தையா ஐயர் சிவலோகநாதக் குருக்கள் சிவானந்த ஐயர் ஆகியோரே குறிப்பிடத்தக்கவர்கள் என்பதும் அறியக்கூடி யதாக இருந்தது. கந்தையா ஐயர் அவர்களின் தவப்புதல் வனே சிவலோகநாதக் குருக்கள் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் உள்ள சைவக் குருக்கள்மாருள் இவர் தலைமைபெற்று விளங்கியது மட்டுமன்றி, அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அத்துடன் கோயிற் கிரியைகளை ஆகம விதிப்படி திறம்பட செய்துமுடிப்பதில் சிறந்த ஆற்றல்பெற்று விளங்கியதுபோல குருக்கள் அவர்கள் சரியைத்தொண்டு செய்வதிலும் தயங்காது தாமே முன்னின்று உழைத்து மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் திகழ்ந்தார். இவரது காலத்தில்தான் அன்னை முத்துமாரி அம்பாளின் ஆலயம் நன்கு வளர்ச்சியடைந்தது. இந்த ஆலயத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள் அவர்களின் தன்னலமற்ற அருட்பணியே ஆகும். அன்னாரின் மறைவுக்குப் பின் அவரது தவப்புதல்வர்களான சிவ. பாலசுப்பிரமணியக் குருக்கள் (தற்போது அமரராகிவிட்டார்), தேவராஜ ஐயர், இராஜேந்திரக் குருக்கள், கிருபாகரக் குருக்கள் ஆகியோர் தந்தையின் வழியைப் பின்பற்றி ஆலயத்தில் அன்றாடம் நடைபெற வேண்டிய பூசைகள் கிரியைகள் யாவற்றையும் முறையாகச் செய்வதுடன் சரியைத் தொண்டுகளும் ஆற்றிவருவது பாராட்டுதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. திருவிழாச் சிறப்பு.

எமது சமய நெறியில் திருவிழாக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. திருவிழாக்கள் தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் நன்மை அளிப்பவை. அதனால், சமூகத்தினர் பலரும் நன்மை பெறுவதுடன் இறையுணர்வும் ஏற்படுகின்றது. இறைவனைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கவும், அவன் திருநாமங்களை வாயாரப் புகழ்ந்து பாடவும், அவனைப்போற்றித் துதிக்கவும் சந்தர்ப்பம் அளிக்கும் நாள்கள் இந்தத் திருவிழா நாள்களே! திருவிழாக்கள் ஆகம விதிப்படி முறையாக நடைபெறுமிடத்து ஆலயங்கள் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. சீர்பெற்ற ஆலயங்களினால் அவை அமைந்துள்ள கிராமங்களும் சிறப்படைகின்றன. திருவிழாக் காலங்களில் கிராமத்து மக்கள் ஆலயத்தில் ஒன்று கூடுவதினால் அவர்களிடையே ஒற்றுமையுணர்வும், ஏற்றத்தாழ்வின்மையும், ஒருவரை மற்றவர் மதித்து நடக்கும் சிறந்த பண்பும் உருவாகின்றன. மேலும் ஓரிடத்திற் குவிந்திருக்கும் செல்வமும் பலரிடத்திற் பரவுவதற்கு வழிகள் ஏற்படுகின்றன. தத்தம் கவலைகளை மக்கள் மறந்து மகிழ்ச்சிகொள்ளத் திருவிழாக்கள் பெரிதும் உதவுகின்றன. ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கின்றன. இத்தகைய நன்மைகளினால் திருவிழாக்களை ஏற்படுத்திவைத்த நமது முன்னோர் பெரிதும் போற்றப்பட வேண்டியவர்களே. ஆலயங்களில் தினசரி நடைபெறும் பூசைகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கவே பெருவிழாக்கள் தோன்றின. இதனையே நித்திய நைமித்திய பூசைகள் என்று கூறுவர்.

'சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.'

என்னும் குறளில் 'சிறப்பு' என்பது பெருவிழாவையும், 'பூசனை' என்பது தினமும் நடைபெறும் பூசையையும் குறிக்கும்.

மனிதப் பிறவி எடுத்ததினால் ஏற்படும் பயன் இரண்டு என்று பெரியபுராணம் பாடிய சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று, அண்ணலார் அடியார் தமக்கு அமுது செய்வித்தல்; மற்றொன்று, நல்விழாப் பொலிவுகண்டு மகிழ்தல். எனவே தொன்றுதொட்டு விழாக்கள் நடைபெற்று வந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

அடுத்து, திருநெல்வேலியில் அருளாட்சிபுரியும் அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயத்திலும் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்களின் சிறப்பையும் இங்கு எடுத்துக் கூறுவோம்.

**மகோற்சவம்:**

இது வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் பெருந் திருவிழாவாகும். முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த மகோற்சவம், ஆனி மாசத்தில் கார்த்திகை நட்சத்திரத்தன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பித்துத் தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறும். இதில் ஐந்தாம் நாள் கைலாச வாகனமும், எட்டாம் நாள் சப்பறோற்சவமும், ஒன்பதாம் நாள் இரதோற்சவமும், பத்தாம் நாளாகிய ஆனி உத்தரத் திருநாளன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். இந்த ஒழுங்குமுறை 1974 ம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் உள்ளது. ஆனால் ஆரம்ப காலங்களில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் வரும் விசாகத் தினத்தன்று தீர்த்தோற்சவம் (பத்தாம் நாள்) நடைபெற்றதாக அறியக்கிடக்கிறது. ஒரு நாள் அன்னை முத்துமாரி சிவலோகநாதக் குருக்கள் ஐயாவின் கனவில் தோன்றி மகோற்சவ காலத்தை மாற்றியமைக்கும்படி கேட்டதாகவும் அதன் பிரகாரம் 1974 ம் ஆண்டில் சம்புரோக்ஷண புநராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று, மஹோற்சவகாலமும் தற்போது நடைமுறையில் உள்ளவாறு மாற்றி அமைக்கப்பட்டது. இந்தக் கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் ஆலயத்தின் திருவருட் பிரகாசம் நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியது. மஹோற்சவம் ஆரம்பிக்கச் சிலதினங்களுக்கு முன்பாகவே அன்னையின் அடியார்கள் ஆலயத்தையும் வீதியையும் சுத்தஞ் செய்யத் தொடங்கி விடுவார்கள். மகரதோரணங்களினாலும் மாலைகளினாலும் மண்டபங்களை அலங்கரிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலையுடன் கூடிய வாழைகளை ஆங்காங்கே நாட்டுவார்கள். அன்றாடம் உழைப்பதும் உண்பதுமாக விருந்த ஊர் மக்களுக்கு மகோற்சவம் நெருங்க நெருங்க ஒரு புதிய உற்சாகம் பிறக்கிறது. திருநெல்வேலிக் கிராமமே விழாக் கோலம் பூண்டு நிற்கும். ஆலயத்தின் சுற்றாடல் எங்கும் தெய்வமணங் கமழும். பக்திப் பாடல்களின் தெய்வீக இசை காற்றில் மிதந்துவந்து, அலைந்து திரியும் மனத்தை அன்னையின் பாதார விந்தங்களிற் பதியவைக்கும் பக்தர்கள் அனைவரும் இந்த மகோற்சவகாலத்தில் தூய உடையும் உள்ளமுங் கொண்டவராய் வரிசை வரிசையாகக் கோயிலுக்கு சென்று வழிபாடு செய்வதைத் தினமும் காணலாம்.

இவ்வாலயத்தில் துவஜாரோகணம் என்னும் கொடியேற்றத் திருவிழா மிகவும் சிறப்பாகவும் சைவாகம முறைப் படியும் நடைபெறுவது வழக்கம். கொடியேற்றத்துக்கு முதல் நாள் அநுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத் சங்கிரகணம் அங்குரார்ப்பணம், ஆகிய கிரியைகள் நடைபெறும். இவைகளினால் நாட்டுக்கும் மக்களுக்கும் பலவித நன்மைகள் ஏற்படுகின்றன. இந்தக் கிரியைகளைப்பற்றிச் சைவ மக்களாகிய நாம் நன்கு அறிந்திருக்கவேண்டும். எனவே, இவற்றை சிறிது விளக்கிக் கூறுவோம்.

அநுக்ஞை என்பது மகோற்சவத்தை எவ்வித இடையூறுமின்றிச் செவ்வனே நடாத்தி முடிப்பதற்கு இறைவனிடம் அநுமதி வேண்டுதல்.

கிராம சாந்தி என்பது ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்தைக் காத்தருளுவதோடு நன்மையான பலன்களைக் கொடுக்குமாறு க்ஷேத்திர பாலகராகிய வைரவப் பெருமானுக்கு பூசை செய்து வேண்டுதல்.

வாஸ்து சாந்தி என்பது கிரியை, மந்திரம், விதி முதலியன யாவும் சுத்தி பெறுவதற்கு வாஸ்து புருடனுக்குச் சாந்தி செய்து அதன் பின்னர் தருப்பை, வைக்கோல் ஆகியவற்றோடு பலாசு, அரசு, அத்தி முதலியன மரங்களின் சருகுகளையும் சேர்த்துப் புருட வடிவமாகச் செய்து அதனைக் கொளுத்திய பின்னர் மண்டபங்கள் உள்வீதி வெளிவீதி எங்கும் இழுத்தும் சுத்திகரித்தல்.

மிருத் சங்கிரகணம் என்பது புற்றுமண் எடுத்தலைக் குறிக்கும். கோயில் வளவிலோ புண்ணிய தீர்த்தக் கரையிலோ நந்த வனத்திலோ அல்லது வில்வ மரத்தடியிலோ முறைப்படி சுத்தமான புற்றுமண் எடுத்து வந்து உலகிலே தானிய விருத்திக்கு முளையிடுவதற்காகப் பயன்படுத்தல்.

அங்குரார்ப்பணம் என்பது முளையிடுதலைக் குறிக்கும். ஏற்கெனவே எடுத்த மண்ணைப் பாலிகை என்னும் மண்சட்டியில் வைத்து நவதானியங்களைத் தூவி முளைக்கச் செய்தல்.

கொடியேற்ற விழாவன்று காலையில் மூலமூர்த்திக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். கொடியேற்றித் திருவிழா முடியும்வரை ஆசூசங்கள் தன்னைப் பாதிக்காவண்ணம் பிரதம குருக்கள் மூர்த்திகளுக்குக் காப்புக் கட்டுதலே ''இரட்சா பந்தனம்' என்னும் கிரியையாகும் பாவங்கள் எல்லாம் நாசமாதற் பொருட்டு கட்டுதல் என்பதே இதன்பொருள். இதனால் கிரியைகள் யாவும் சித்தியாகும். கொடியேற்றத்துக்கு ஆதாரமாக அமைந்த கொடிமரம், கர்ப்பக்கிருகத்துக்கு எதிரே நந்திக்கும் பலிபீடத்துக்கும் பின்புறமாக ஆலயத்தின் நடுவே ஓங்கி உயர்ந்து விளங்குவதைக் காணலாம். கொடிமரத்திற் காணப்படும் முப்பத்துமூன்று கணுக்கள் நமது சரீரத்தின் முள்ளந்தண்டில் உள்ள முப்பத்துமூன்று என்புக் கோவைகளைக் குறிப்பனவாகும். கொடிமரத்தைத் துவஜஸ்தம்பம் என்றும் கூறுவர். கொடிச்சீலை என்பது நீண்டதொரு தூய வெண் துகிலாகும். இதில் சிம்ம வாஹனத்தில் சூலாயுதத்தையும் கும்பம், சங்கு, தீபம், அஸ்திரம், பேரி சூரியன். சந்திரன், மணி, திருவாசி, குடை, கண்ணாடி, சாமரைகள் முதலியவற்றின் படங்களை வரைந்து பூசித்தல். திருவிழாவுக்கு இன்றியமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அஸ்திரதேவர், பலிபீடம், ஆகிய நாலுக்கும் பிரதிட்டைக்காகக் கும்பபூசை செய்தல். கும்பபூசை முடிந்த பின்னர் வசந்தமண்டபத்திலிருந்து விநாயகர், அம்பாள் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆகிய உற்சவ மூர்த்திகளை விசேட பூசை நடைபெற்று முடிந்ததும் மங்கல வாத்தியங்களுடன் எழுந்தருளச்செய்து கொடிமரத்துக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புறமாக வடக்கு நோக்கி வீற்றிருக்கச்செய்து கொடியேற்றுதல். கொடிச்சீலைக்குப் பூசைகள் நடைபெற்று முடிந்ததும் அதனைமேள வாத்தியங்களுடன் வீதிவலம் வரச்செய்து 'சமஸ்த தேவதாவாகனம்' என்னும் கிரியையினை முடித்துக்கொண்டு, உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த'கொடிக்கவி' ஓதப்படும். கொடிமரத்தின் கீழ் அஸ்திரராஜர் என்ற சூலத்தில் சகல தேவதைகளையும் எழுந்தருளச்செய்வதே 'தேவதா ஆவாஹனம்' எனப்படும்.

தில்லைத் திருவிழாவின் கொடியேற்றத்தின் பொழுது ஒருமுறை ஏறுதிருந்த கொடியை ஏற்றுதற்காக உமாபதி சிவாச்சாரியாரால் அருளிச்செய்யப்பட்டதே கொடிக்கவி ஆகும். ஆலயங்களில் கொடியேற்றும்போது இந்தக் கொடிக்கவி நான்கையும் படித்தே கொடியேற்றுவார்கள். சித்தாந்த உண்மைகளைச் செறிவாகக்கொண்டு சிறந்து விளங்கும் இந்தப் பாடல்களை அன்பர்கள் நன்கு அறிந்திருக்கவேண்டும். அதுமட்டுமல்ல, சந்தர்ப்பம் கிடைக்கும் போது இந்த நான்கு பாடல்களையும் பாடுவதற்குத் தயாராக மனனம் செய்துவைத்திருக்கவேண்டும். அன்பர்களின் நலன்கருதிக் கொடிக்கவிப் பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

## உமாபதி சிவாச்சாரியார்
## அருளிச் செய்த

# கொடிக் கவி.

கட்டளைக் கலித்துறை

1. ஒளிக்கும் இருளுக்கு மொன்றேயிட மொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடராதுள் ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடி கட்டினனே.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

### நேரிசை வெண்பா.

2. பொருளாம் பொருளேது போதேது கண்ணோ
இருளாம் வெளியே திரவே – தருளாளா
நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினோன்
கோபுர வாசற் கொடி.

3. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை–நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி.

4. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்–நெஞ்சமுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி.

கொடிக்கவி பாடிமுடிந்ததும் தீபாராதனை நடைபெறும். பின்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க சுபமுகூர்த்தத்தில் கொடிச்சீலையைக் கொடிமரத்தில் ஏற்றும் வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தர்ப்பைப் புல்லினாலும், பட்டுவஸ்திரத்தினாலும் கொடிமரத்தின் அடியை அலங்கரித்து அபிஷேக ஆராதனை பலி முதலிய கிரியைகள் நடைபெறும். ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் வெளிவீதியின் எட்டுத் திக்குகளிலும் அட்டதிக்குப் பாலகரைத் தியானித்து ஒவ்வொன்றுக்கும் உரிய வேதமந்திரம், இராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் பூசையும் பலியும் நடாத்தப்படும். அஸ்திர தேவர் தினமும் இருவேளைகளிலும் வெளிவீதி வலம்வந்து பலியிடல் நிகழ்ச்சி நடைபெறும். கொடியேற்ற விழாவன்று விநாயகர், அம்பாள், சுப்பிரமணியர் முதலிய உற்சவ மூர்த்தங்களுக்கு விசேட பூசைகள் நடைபெற்று, மங்கல வாத்தியங்களுடன் திருவீதிவலம்வரும் திருவுலாக் காட்சியும் நடைபெறும். இந்த மகோற்சவ காலங்களில் அம்பாளின் தரிசனம்பெறத் திருநெல்வேலியிலும் மற்றும் அயல் கிராமங்களிலிருந்தும் அடியவர்கள் ஆயிரக் கணக்கில் வந்துசென்றவண்ணம் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான படைப்புத் தொழிலைக் கொடியேற்றம் குறிக்கிறது. அதனைத் தொடர்ந்து வரும் விழாக்கள் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவற்றைக் குறிக்கின்றன. தேர்த்திருவிழா சங்காரத்தை அதாவது அழித்தலைக் குறிக்கின்றது. தீர்த்தத் திருவிழா அருளலைக் குறிக்கும். இவ்வாறாக ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழில்களையும் நமக்கு நினைவூட்டுகின்றன. கொடிமரம் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள விமானத்தின் உயரத்துக்குத் தகுந்த அளவு உயரமானது. கொடியேற்றத்துக்குப் பயன்படுத்தும் கொடிச்சீலை ஆன்மாவைக் குறிக்கிறது. சீலையுடன் சேர்ந்திருக்கும் தர்ப்பையைக் கயிறு பாசத்தைக் குறிக்கிறது. ஆன்மா பாசத்தினின்றும் நீங்கிச் சிவத்தைச் சார்வதைக் குறிப்பதே கொடியேற்றமாக அமைகிறது. எனவே தர்மத்தையும் உயிர்களையும் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு உயர்த்துவதையே கொடியேற்றம் உணர்த்துமென்பது நன்கு தெளிவாகிறது. ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களிலும் உழலும் உயிர்களைக் கீழ்நிலையிலிருந்து இறைவன் மேல்நிலைக்கு ஏற்றுகிறான் என்பதனைக் கொடியேற்றம் உணர்த்துகின்றது, எனத் தான் பாடிய கொடிக்கவியில் உமாபதிசிவாச்சாரியார் கூறியுள்ளார்.

"திரி மலத்தே குளிக்கும் உயிர் அருள் கூடும்படிக் கொடி கட்டினனே'' என்ற வரிகள் இவற்றை விளக்கி நிற்கின்றன.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்திருக்கின்ற பரம்பொருள் தயிரில் வெண்ணெய்போல ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். ஆதியும் அந்தமும் இல்லாத அந்த இறைவனை உற்சவகாலங்களில் கொடிமரத்திலும், உற்சவ மூர்த்திகளிலும், கும்பத்திலும் எழுந்தருளச் செய்வதற்கு யாகங்கள் பூசைகள் நடைபெறும். இந்த மூன்று இடங்களையும் ஸ்தம்பம், விம்பம், கும்பம் எனக் கூறுவதுண்டு. எனவேதான் ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் கொடிமரப் பூசை, வசந்தமண்டபப் பூசை, யாகசாலைப் பூசை என்பன மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்த்திருவிழா:** அன்னை முத்துமாரியின் உற்சவகாலங்களில் தேர் திருவிழாவைப்போல மகிழ்ச்சியைத் தரத்தக்க விழா வேறென்றில்லை. தேவியின் சந்நிதியில் ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் சமம் என்ற உணர்வுடன் மக்கள் கூடும் போது சமூக உறவு விருத்தியடைகிறது. சமுதாய ஒருமைப்பாடு மிளிர்கிறது. அடியார்கள் பலரும் எந்தவித பேதமுமின்றி ஒன்று சேர்ந்து தேரின் வடத்தை இழுக்கும்போது தேர் நகர்ந்து செல்லுகின்றது. இதனல் சமுதாயத்தில் கூட்டு முயற்சியின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

இவ்வாலயத்தில் தேர்த்திருவிழாவன்று காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நிறைவுபெற்றதும், வசந்த மண்டபத்தில் அம்பாளுக்குத் தீப அலங்காரங்களுடன் பூசைகள் நடைபெற்றுப் பஞ்சபுராணம் பாராயணஞ்செய்யப்படும். பின்னர் குடை, கொடி, ஆலவட்டங்களுடன் அலங்காரம் செய்யப்பட்ட பீடத்தில் ஆரோகணித்து அன்னை முத்துமாரி மங்கலவாத்தியங்கள் சகிதம் தேருக்கு எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அன்னையின் அருள்மிகு திருக்கோலத்தைக் கண்டு களிப்படைபவர்கள் புண்ணியப் பேறுடையவர்களே! அன்னை தேரில் எழுந்தருளியதும் தீபாராதனை நடைபெறும். 'தாயே சரணம்' , 'அன்னை முத்துமாரி அம்மா உன் பாதம் சரணம் அம்மா' என்று அடியார்கள் அகிலபுவன மாதாவாகிய அந்தத் தேவியை வேண்டுதல் செய்யும்காட்சி கல் நெஞ்சையும் உருக்கும். அடியார்கள் ஆயிரக் கணக்கான தேங்காய்களை உடைத்துத் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவுசெய்வர். அம்பாளின் தேர் வடத்தை ஒரு பக்கத்தில் ஆண் பக்தர்களும் மறுபக்கத்தில் பெண் பக்தர்களும் பிடித்துக்கொண்டு "அரோஹரா" , " அன்னை முத்துமாரிக்கு அரோஹரா " என்னும் ஓசையுடன் தேரை இழுக்க அது அசைந்து செல்லும் காட்சி பார்த்துப் பரவசப்படவேண்டிய தொன்றாகும். அம்பாள் பவனிவரும் சித்திரத் தேரில் அழகுற அமைக்கப்பட்ட மணிகள் அசைந்தாட அதனல் எழும் ஓசை அடியார்களை மெய்ம்மறக்கச் செய்து அன்னையின் அருட்கடாட்சத்தில் திளைக்கச் செய்கிறது. தேரோடும் வீதியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பந்தலடியில் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் தரித்து நிற்கும். அம்பாளுக்குத் தீபாராதனைகள் நடைபெறும். வீதிகள் எல்லாம் அடியார்கள் தத்தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக அங்கப்பிரதட்சணம் செய்தல், கற்பூரச் சட்டியை ஏந்தியவண்ணம் செல்லுதல், பஜனைப் பாடல்கள் பாடுதல் முதலிய கைங்கரியங்களைச் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இத்தருணத்தில் தேர்த்திருவிழா உணர்த்தும் தத்துவம் என்ன என்பதைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். உலகத்தையே தேராகக்கொண்டு இறைவன் இவர்ந்து வருகின்றான் என்பதையே தேர்த்திருவிழா விளக்குகிறது. தேரில் காணப்படும் நான்கு குதிரைகளும் நான்கு வேதங்களைக் குறிப்பிடுகின்றன. பிரம்ம தேவனே இந்தத் தேருக்குச் சாரதியாக விளங்குகிறான். பூமியாகிய இந்தத் தேருக்குச் சூரிய சந்திரர் சக்கரங்களாக அமைந்துள்ளனர். சூரியன் அகத்தைப் போக்குவான். சந்திரன் மகிழ்ச்சியை அளிப்பான் ஆணவம் கன்மம் மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களையும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டு இறைவன் தேரூர்ந்து வருகின்றான் என்று பல நூல்கள் தேர்த் திருவிழாவின் தத்துவத்தினை எடுத்து இயம்புகின்றன.

பெரிய வீதியைத் தேர் சுற்றி ஆலய வாசலுக்கு வந்ததும் அம்பாளுக்கு விசேட ஆராதனைகள்நடைபெறும். பின்னர் ஆலய வசந்தமண்டபத்துக்குச் செல்லும் காட்சியும் கண்டுகளிக்க வேண்டிய தொன்றாகும். எனவே தேர்த் திருவிழா ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

தீர்த்தத் திருவிழா:

வழமைபோல அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று முடிந்ததும், விநாயகர், அம்பாள், முருகன் ஆகிய தெய்வத் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து அடியார்கள் ஆயிரக் கணக்கில் புடைசூழ வெளிவீதி வலம்வந்து, வடகிழக்கு மூலையில் உள்ள தீர்த்தக் கிணற்றடியில் தோரணம், மாவிலை பூமாலை என்பவற்றால் அலங்கரிக்கப்பட்ட தீர்த்தத் திருமடத்துக்குப் பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பதற்காக வாகனங்களில் வீற்றிருக்கச் செய்வர். பால், இளநீர், தயிர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
பிரதம குரு
சிவ ஸ்ரீ சி. இராஜேந்திரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், மற்றும் விபூதி,சந்தனம், குங்குமம், பன்னீர் ஆகியவற்றால் சண்டேசுவரருக்கு அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறும். பக்தர்கள் மனமுவந்து கொடுத்துதவிய அபிஷேகத் திரவியங்களைக் கொண்டு நடைபெறும் இந்நீராட்டினைக் கண்டோர் உள்ளங்கள் யாவும் துன்பங்கள் நீங்கப்பெற்று மனநிறைவு பெறும். அபிஷேகம் நிறைவுபெற்றதும் பல்வேறு நிவேதனப் பொருட்களைப் படைத்து விசேட பூசை நடைபெறும். பூசை முடிந்ததும் அடியார்களுக்குத் தீர்த்தமும் பிரசாதமும் வழங்கப்படும். அன்று மாலை துவஜ அவரோகணம் (கொடியிறக்கம்) மற்றும் சண்டேஸ்வர உற்சவம், ஆசாரியார் உற்சவம் என்பன தொடர்ந்து நடைபெறும் சிறப்பம்சங்களாகும். இவ்வாலயத்தில் மகோற்சவ காலத்தில் மூன்றும் நாள் பூந்தண்டிகை உற்சவமும், ஐந்தாம் நாள் கைலாசவாகனத் திருவிழாவும், ஆறும் நாள் மஞ்சத் திருவிழாவும், ஏழாம் நாள் குதிரை வாகன (ஒரு முக)த் திருவிழாவும் எட்டாம் நாள் சப்பரத் திருவிழாவும்,ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழாவும், பத்தாம் நாள் தீர்த்தத் திருவிழர்வும், பதினொராம் நாள் பூங்காவனமும், பன்னிரண்டாம் நாள் வைரவர் சாந்தியும் பொங்கலும் சிறப்பாக நடைபெறும். மகோற்சவ காலத்தில் விசேட உற்சவங்களாக சாயந்தரம் 4½ மணிக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் உற்சவம், சந்தான கோபாலர் உற்சவம், மகாலட்சுமி தேவி உற்சவம், சரஸ்வதி தேவி உற்சவம், துர்க்கை அம்பாள் உற்சவம், என்பன 1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொருவருடமும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் வருடாந்த உற்சவங்கள் காலவரையறையோடும் பக்திசிரத்தையோடும் நடைபெறுவதற்குப் பிரதம குருக்கள் முதற்கொண்டு அடியார்கள் வரை சகலரும் தங்கள் ஒத்துழைப்பை நல்கி வருவது பாராட்டுதற்குரியது.

கும்பாபிஷேக தினத்தை நினைவுகூருமுகமாக ஒவ்வொரு வருடமும் சித்திரை மாசத்தில் வரும் பூர நட்சத்திரத்தன்று சகஸ்ர சங்காபிஷேகமும், திருவூஞ்சல், தண்டிகை உற்சவமும், சித்திரா பௌர்ணமித் தினத்தில் சுமங்கலி தீப பூசையும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத் தன்று நடைபெறும் பொங்கல் விழா ஒரு தனிச் சிறப்பும் பெருமையும் வாய்ந்தது. இந்தப் பொங்கல் விழாவில் பங்குபற்ற ஆலயத்தின் சுற்றுடலிலிருந்தும் அயற்கிராமங் களிலிருந்தும் அடியார்கள் அதிகாலையிலிருந்தே பொங்கிப் படைப்பதற்காக வந்தவண்ணம் இருப்பார்கள். காலை தொடக்கம் மாலை வரைக்கும் ஆலய முன் வாசலிலும் வடக்குத் தெற்கு வீதிகளிலும் பொங்கல் நடைபெற்ற வண்ணம் இருக்கும். இப்பொங்கலின் ஆரம்பம் நாயக வளுந்துப் பொங்கலாக மிக முக்கிய சிறப்பம்சமாக நடை பெறும். பொங்கல் அவிர்ப்பாகம் யாவும் காத்தவராயரு டைய மண்டபத்திலே படைக்கப்பட்டு, அபிஷேக ஆராத னைகள் தீபாராதனைகள் நடைபெற்று, பஞ்சபுராணம் ஓதப் பட்டுப் பொங்கல்விழாவழிபாடு நடைபெற்று வருவது இவ்வாலயத்தில் தொன்று தொட்டு நடைமுறையில் உள் ளதொரு மரபாகும்.

அன்றைய தினம் மாலையில் அம்பாள் வீதிவலம் நிறைவுபெறறதும், அடியார்களின் தீ மிதிப்பு வைபவம் நடைபெறும். அன்னையின் அடியார்கள் பகல் முழுவதும் நோன்பிருந்து தேவியின் திருவருளையே துணையாகக் கொண்டு பக்திப்பரவசத்துடன் வெந்தணலில் எவ்வித தயக்கமுமின்றி நடந்துசெல்லும் காட்சி, பார்த்துக் கொண்டிருப்பவர்களை மெய்சிலிர்க்கச் செய்யும்.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பூர நட்சத்திரத்தன்று காலையில் அம்பாளுக்கு அபிஷேகமும் தொடர்ந்து விசேட பூசையும் நடைபெற்று அம்பாள் உள்வீதி வலம்வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பது குறிப்பிடத்தக்கது. அன்னையின் ஆடிப் பூர விழா இவ்வாலயத்தில் மிகவும் சிறப் பாகக் கொண்டாடபபட்டு வருகிறது.

ஆவணி மாதத்துச் சதுர்த்தித் திதியில் விநாயகப் பெருமானுக்கு விசேடஅபிஷேகம், பூசை, திருவிழா என்பன நடைபெறுவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாசத்தில் வரும் சுக்கில பட்சத்தின் முதல் நாளிலிருந்து அதாவது பிரதமைத் திதியிலிருந்து நவமி ஈறாகிய ஒன்பது நாள்களும் நவராத்திரி விழா இவ்வாலயத்தில் பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. புவனம் பதினான்கையும் பூத்தவளாகிய புவனேஸ்வரியை உள்ளன்புடன் வழிபட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வழி காட்டும் புண்ணிய காலம் இந்த நவராத்திரி ஆகும். மக்கள், உலகில் வாழ்வதற்கு அதாவது வாழ்வாங்கு வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாகிய வீரம், செல்வம், கல்வி ஆகிய பேறுகளை அருளுமாறு துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்னும் மூன்று சக்திகளையும் முறையே மும்மூன்று இரவுகளில் வணங்குதல் முறை. இவ்வாலயத்திலும் வீரத்துக்குரிய சக்தியான துர்க்கா தேவிக்கு முதல் மூன்று நாள்களும், செல்வத்தை வழங்கும் சக்தியான இலக்குமி தேவிக்கு அடுத்த மூன்று நாள்களும், கல்வித் தெய்வமான சரஸ்வதிக்கு இறுதி மூன்று நாள்களும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். நவராத்திரியின் மூன்றாம் நாள், ஆறாவது நாள் ஒன்பதாம் நாள்களின் மாலைப் பொழுதில் முறையே துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வத் திருவுருவங்களை எழுந்தருளச் செய்வது கடந்த ஏழு ஆண்டுகளாக (1987 ம் ஆண்டு தொடக்கம்) நடைமுறையில் உள்ளது. மகா நவமி தினத்தன்று மகிடாசூர சங்காரமும், விஜய தசமியில் மானம்பூ உற்சவமும் நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தில் கேதார கௌரி விரதம் அநுஷ்டிக்கப்படும் இருபத்தொரு நாள்களும் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவது வழக்கம்.

ஐப்பசி மாசத்தில் கந்த சட்டி விரத ஆறு நாள்களும் சுப்பிரமணியருக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று, இறுதி நாளான ஷஷ்டியிலன்று வள்ளி தெய்வயானை சமேதராக சுப்பிரமணியப் பெருமான் வீதிவலம் வந்து அடியார்களுக்குத் தரிசனம் கொடுப்பார். கார்த்திகை மாசத்தில் வரும் திருக்கார்த்திகை தினத்தன்று காலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறும். சர்வாலய தீபதினத்தன்று மாலையில் அம்பாளுக்கு விஷேட அபிடேகாராதனைகள் நடைபெற்று அம்பாள் எழுந்தருளியதும் சொர்க்கப் பனைக்குத் தீமூட்டியபின் திருவிழாவும் நடைபெறும்.

மார்கழி மாசத்தில் விநாயக ஷஷ்டி விரதம் வழமை போல் அநுஷ்டிக்கப்படும். காலையில் விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றுப் பின்னர் மாலையில் திருவிழாவும் நடைபெற்றுப் பிள்ளையார் கதைப் படிப்புடன் நிறைவு பெறும். மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாக விளங்குகின்றபடியால் அநேகமாக எல்லா ஆலயங்களிலும் உதயகாலத்தில் பூசைகள் நடைபெறும். திருவெம்பாவை தெருவெல்லாம் மலர்ந்து மணம்பரப்பும்காலம். மாணிக்கவாசப் பெருமான் அருளிச் செய்த தேமதுரத் திருவெம்பாவைப் பாடல்களை மங்கையர் பாடிக்கொண்டு ஆலயங்களுக்கு அணிவகுத்துச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இக்காலத்தில் அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயத்திலும் திருவெம்பாவைப் பூசை சிறப்பாக நடைபெறுவது வழக்கம். தினமும் காலையில் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று முடிந்ததும் திருவெம்பாவைப் பாடல்கள் படிக்கப்பெற்று அம்பாளின் திருவுலாக் காட்சியும் நடைபெறும். திருவெம்பாவைப் பூசையின் ஒன்பதாம் நாள் இரதோற்சவமும் பத்தாம் நாளாகிய மார்கழித் திருவாதிரைத் தினத்தன்று திருமஞ்சனத் தீர்த்தமும் நடைபெறும்.

தை மாசத்தில் முக்கியமாகத் தைப்பொங்கல் விழாவும், தைப்பூச நன்னாளில் விசேட அபிஷேக ஆராதனைகளும் கிரமம் தவறாது நடைபெற்று வருகின்றன. தை மாசத்தில் வரும் அமாவாசை தினத்தன்று- அபிராமிப்பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்த தினத்தன்று – இந்த ஆலயத்தில் இவ்விழா பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அபிராமிப்பட்டர் அருளிச் செய்த அபிராமி அந்தாதி நூறு பாடல்களும் பாடப்பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளுக்குத் தீபாராதனைகள் நடைபெறும். பின்னர் அடியார்களுக்குக் காட்சி கொடுப்பதற்காக அம்பாள் வெளியே வீதிவலம் வருவது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். அன்னையின் அடியார்கள் அபிராமி அந்தாதிப் பாடல்களைத் தினமும் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்வதற்கு வசதியாக இந்த ஆலய வரலாற்று நூலின் இறுதியில், 'தேவி தோத்திரப் பாடல்கள்' என்ற பகுதியில் சேர்த்துள்ளோம்.

மாசி மகமும், சிவராத்திரியும் அபிஷேகம் பூசை என்பனவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவது வழக்கம். மேலும், கடந்த 1992ம் ஆண்டு தொடக்கம் மாசி மாசத்தில் இலட்சார்ச்சனை பத்து நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், நிறைவுநாளான மாசி மகத் தினத்தன்று பகல் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விசேட உற்சவத்தில் சிம்ம வாஹனத்தில் ஆரோகணித்து எழுந்தருளிவரும் அம்பாளின் அருளை நாடிவரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ் விழாவில் பங்குபற்றுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பங்குனி மாசத்தில் நமது நாட்டில் வெப்பம் மிகுதியாகக் காணப்படும். இக்காலப் பகுதியில் ஆங்காங்கே உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் தோன்றி மறையும். பிணிகளைப் போக்கும் அன்னைக்கு ஆலயங்களில் விசேட ஆராதனைகள் நடைபெறும். திங்கட்கிழமை தோறும் நீர் மோர்க்கஞ்சி அடியார்களுக்கு வழங்கப்படும். சில ஆலயங்களில்அன்னதானமும் நடைபெறும்.

அன்னை முத்துமாரி அம்பாளின் ஆலயத்திலும் கடந்த 1988ம் ஆண்டு தொடக்கம் பங்குனி மாசம் முழுவதும் தினமும் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. துர்க்கை அம்மன் உற்சவ மூர்த்தி குரோதன வருஷம்(1986 ம் ஆண்டு) பங்குனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசம் புனர்பூச நட்சத்திரத்தன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுச் சங்காபிஷேகமும் திருவிழாவும் நடைபெற்றது. அன்று தொட்டு ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் வசந்த மண்டபத்தில் துர்க்கை அம்மனை எழுந்தருளச் செய்து விசேட பூசை வழிபாடுகளுடன் உற்சவம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் துர்க்கை அம்மனைப் பிரதிஷ்டை செய்த ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் பங்குனி மாசப் புனர்பூச நட்சத்திரத்தன்று துர்க்கை அம்மனுக்கு விசேட அபிஷேகமும் உற்சவமும் விமரிசையாக நடைபெறும். இவ்வாறு பங்குனி மாசம் முழுவதும் அன்னையின் ஆலயத்தில் தெய்வீக ஒளி வீசிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்றுத் திருநெல்வேலிக் கிராமத்தில் ஓர் அருளாலயமாக விளங்கும் அன்னை முத்துமாரி அம்பாளின் திருப்பதியின் தல விருட்சமாக கொன்றையும் வேம்பும் பலாவும் விளங்குகின்றது. தொன்மை பெற்று விளங்கும் இவ்வாலயம் தொழுபவர் நெஞ்சில் உண்மையான தூய்மையை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. மஹா கும்பாபிஷேகம்

மனித வாழ்வில் கிரகங்களால் ஏற்படும் துன்பங்களைப் போக்கும்வண்ணம் சாந்திகள் செய்யப்படும். இது ஒவ்வொருவரதும் தன்னலத்திற்காகச் செய்யப்படும் சாந்தி. தான் வாழவேண்டும், தன் அருமை மனைவி பிள்ளைகள் வாழவேண்டும் என்று தன் சுயநலனுக்காகவே இந்தச் சாந்தியைச் செய்கின்றார்கள். ஆனால் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை ஆலயங்களிற் செய்யப்படும் சாந்தி பெருஞ்சாந்தியாகும். இதனையே மஹா கும்பாபிஷேகம் எனச் சிவாகமம் கூறும். பன்னிரண்டு ஆண்டுக்கால நீண்ட இடைவெளியில் தெரிந்தும் தெரியாமலும் வழிபாட்டுக் குறைவு, மந்திரக் குறைவு இன்னும் எத்தனையோ குறைபாடுகள் ஆலயங்களில் ஏற்பட்டிருக்கும். இத்தகைய குறைகளை நீக்கி, இறைவன் என்றும் மணியின்கண் ஒளிபோல மூர்த்தியிடம் பிரகாசிக்கச் செய்யப்படும் சாந்தியாகும். இது உலகத்தின் நன்மைக்காக, இறைவனின் அருள் ஒளியை என்றும் விளங்கச் செய்வதற்காகச் செய்யப்படும் பெருஞ் சாந்தி. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பது மரபு. கும்பாபிஷேகத்தைக் குடமுழுக்கு என்றும் சொல்லுவார்கள்.

கும்பாபிஷேகமும் ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம் என நான்கு வகைப்படும். பெருமழை, காற்று, பூகம்பம் போன்ற இயற்கை அழிவுகளினால் சிதைந்து கிடக்கும் பழைய கோயில்களில் உள்ள மூர்த்திகளை அப்புறப்படுத்தி புதிதாகக் கோயில் நிர்மாணித்து அங்கே மூர்த்திகளை எழுந்தருளச்செய்தல் ஆவர்த்தனமாகும். அநாவர்த்தனம் என்பது கோயில் இல்லாத ஊரில் ஆகம விதிப்படி புதிதாகக் கோயில் அமைத்து மூர்த்தியைத் தாபித்தல். பழுதடைந்த கோயிலைப் புதுப்பித்து வர்ணப் பூச்சுக்கள் பூசிப் பெருஞ்சாந்தி செய்தலே புநராவர்த்தனம் எனப்படும். கோயிலுக்குள் யாராவது இறந்தாலும் அல்லது மாடு, ஆடு, நாய் போன்ற விலங்குகள் இறந்தாலும் செய்யப்படும் பிராயச்சித்தம் அந்தரிதம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் ஆகம விதிப் படியான கும்பாபிஷேகங்கள் காலத்துக்குக் காலம் நடை பெற்று வந்துள்ளன என அறியக்கூடியதாக இருக்கிறது. ஆலயம் நிர்மாணிக்கப்பட்ட காலம் தொடக்கம் நடை பெற்றுவந்த கும்பாபிஷேகங்களின் முழு விபரங்களும் தெரியக்கூடியதாக இல்லை. கடந்த இருபது ஆண்டுகளில் மூன்று கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. ஒன்று புனராவர்த்தன கும்பாபிஷேகம். மற்ற இரண்டும், பரிவார மூர்த்திகளுக்கு நடைபெற்ற பிரதிஷ்டா கும்பாபிஷேகங் கள் ஆகும்.

ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும், விநாயகர், வைரவர், சண்டேஸ்வரி முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் விரோதி கிருது வருஷம் சித்திரை மாதம் 2 ந் திகதி (5–5–1971) புதன்கிழமையும், பூர்வ பக்ஷத் தசமித் திதியும் பூர நட்சத் திரமும் அமிர்த யோகமும் கூடிய சுப தினத்தில் புனரா வர்த்தன சம்புரோக்ஷண அஷ்ட பந்தன மஹா கும்பா பிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் அதி காலை 5 மணி தொடக்கம் யாகபூசை, மஹா பூர்ணாகுதி, மஹா தீபாராதனை, நவக்கிரக தானம், யாத்திரா தானம், ஸ்தூபி அபிஷேகம் என்பன நடைபெற்றுக் காலை 6 மணி 37 நிமிஷத்திற்கும் 8 மணி 25 நிமிஷத்திற்கும் இடைப்பட்ட இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும் பாபிஷேகம் நடைபெற்றது. யாகசாலையில் உருவேற்றப் பட்ட கும்பங்களை வேத மந்திர பாராயணத்துடன் பல் லியங்கள் ஒலிப்ப, பத்தர்களின் பஜனைப் பாடல்களுடனும் குடை, கொடி, ஆலவட்டம் சாமரை ஆகிய உபசாரங்க ளுடனும் சிவாச்சாரியர்கள் பயபக்தியுடன் சிரசின்மேல் கும்பங்களைத் தாங்கிக்கொண்டு சென்றகாட்சி இன்றும் பசுமைநிறைந்ததாக இருக்கிறது. இந்தக் காட்சியைக் காண்பதுவே ஒரு தனிப் பெரும் பேறுகும். இத்தகைய கும்பாபிஷேகங்களைத் தரிசித்தவர்கள் பாக்கியசாலிகளே.

இந்த ஆலயத்தில் மீண்டும் ஒரு கும்பாபிஷேகம் சித் தார்த்தி வருஷம் சித்திரை மாதம் 20 ஆம் நாள் (3–5–1979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவ ஸ்ரீ ச. மகாலிங்க சிவக்குருக்கள்
அவர்களின் தலைமையில் 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம்
25ம் திகதி அன்று

**சிவ ஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள்**

அவர்களுக்கு ஆச்சாரிய அபிஷேகம் நடைபெற்ற போது
எடுத்த படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாழக்கிழமை நடைபெற்றது. அன்று வள்ளி தெய்வயானை சமேதராகிய சுப்பிரமணியப் பெருமானுக்கும் எழுந்தருளி மூர்த்திகளுக்கும் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் பகல் 8 மணி 47 நிமிஷத்திற்கும் 10 மணி 46 நிமிஷத்திற்கும் இடைப் பட்டமிதுன லக்கின சுப வேளையில் இனிது நிறைவேறியது

கடைசியாகக் குரோதன வருஷம் பங்குனி மாதம் 7ந் திகதி புனர் பூச நட்சத்திரத்தன்று துர்க்காதேவி, நாக பூஷணி அம்மன், சந்தான கோபாலர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்ட சிறியகோயில்களில் கும்பா பிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

புனராவர்த்தன கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை செய்தல் உத்தமம் என ஆகமங்கள் கூறுகின்றன. 1971ம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து அதாவது 1983ஆம் ஆண் டில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருத்தல்வேண்டும். ஆனல், நாட்டில் அந்நேரம் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையில் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. நமது நாட்டில் தொடர்ந்து நடைபெற்ற வன்செயலும், இராணுவக் கெடு பிடிகளும் அமைதியின்மையும் கும்பாபிஷேகத்தை நடாத் தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை. தற்போது நாட்டில் ஓரளவு அமைதி நிலவுகிறது. நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. எனவே, அடுத்துவரும் ஆண்டுகளில் தொடர்ந்தும் சுமுகமான சூழ்நிலை நிலவி, நாட்டில் சுபீட்சம் மலர்ந்தால் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு ஆலய நிர்வாகத்தினர் முடிவுசெய்துள்ளனர். இதற்கு அம் பாளும் திருவருள் புரியவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. அன்னை முத்துமாரியின் அருளாட்சி

அன்னையின் திருநாமம் எந்த நேரமும் எமது நாவில் தவழவேண்டும். அவளது சிந்தனை எமது உள்ளத்தில் என்றும் நிறைந்து விளங்கவேண்டும். அப்போது நாம் உலகில் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. அன்னையை அன்புடன் நாடி நாம் ஓரடி எடுத்துவைத்தால் அவள் நான்கு அடிகள் எடுத்துவைத்து எமக்கு அருள் புரிய விரைந்துவருவாள். அன்னை முத்துமாரியின் அருள் திறனுக்கு உதாரணமாக மிகவும் அண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒன்றினை எடுத்துக்கூறுவோம்.

1987 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17ந் திகதி, ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கென வந்த இந்திய அமைதி காக்கும் படையினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் எறிகணைத் தாக்குதல் நடத்தி, மக்களை நிலைகுலையச் செய்தனர். மக்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். திருநெல்வேலி வாழ் மக்க்ள் அருகில் இருந்த ஆலயங்களிலோ அல்லது பாடசாலைகளிலோ அடைக்கலம் புகுந்தனர். அன்னை முத்துமாரி அம்மன் ஆலயமண்டபத்திலும் உட்சுற்றுப்பிரகாரங்களிலும் அகதிகள் நிரம்பி வழிந்தனர். அன்று இரவு பயங்கரமான எறிகணைத் தாக்குதல் நடைபெற்றது. ஒன்றன் பின் ஒன்றாகப் பேரிரைச்சலுடன் வந்த எறிகணைகள் ஆலயத்துக்கு மேலும் வெடித்துச் சிதறின. அந்தப் பயங்கரச் சப்தத்தை இன்று நினைத்துப் பார்த்தாலும் இருதயமே நின்றுவிடும் போலத் தெரிகிறது அகதிகள் அனைவரும் அன்னை முத்துமாரி தங்களைப் பாதுகாப்பாள் என்ற முழு நம்பிக்கையோடு 'தாயே! சரணம் முத்துமாரித் தாயே சரணம்! என்று அன்னையின் சிந்தனையுடன் அன்றிரவைக் கழித்தனர். ஆலயத்துக்கு மேல் எறிகணைகள் வெடித்துச்சிதறியபோதும் ஆலயத்துக்கோ அல்லது அங்கு தஞ்சம் புகுந்திருந்த அகதிகளுக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. அன்னை முத்துமாரி, தன்னை நம்பித் தஞ்சம் அடைந்தவர்களைப் பாதுகாத்துவிட்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மக்கள் பேசிக்கொண்டதோடு அவளது அருட்டிறனை யும் வியந்து போற்றினர். அன்னையின் அருள் இருந்தவாறு என்னே! என்று மக்கள் வாயார வாழ்த்தினர்.

அன்னையின் அருட்பிரவாகத்திற்குச் சான்ருக இன்னும் எத்தனையோ சம்பவங்களை எடுத்துக்கூறலாம். விரிவுக்கஞ்சி இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் சுருக்கமாகத் தருகிறேன். அன்னை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் ஆண்டு தோறும் வைகாசி விசாகத்தன்று பொங்கல் விழாவுடன் தீ மிதிப்பு வைபவம் நடைபெறுவது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாகும். இந்தத் தீ மிதிப்பு வைபவம் பக்தி பூர்வ மானது. அம்பிகையின் அடியவர்களைப் பரவசப்படுத்துவது. தீ மிதிப்பில் பங்குபற்றும் அடியார்கள் அன்று பகல் முழு வதும் விரதம் அநுட்டித்து அந்தி மாலைப் பொழுதில் நடைபெறும் விசேட ஆராதனைகளிற் கலந்துகொள்வார்கள் ஆலயத்தின் கிழக்குவாசல் முன்புறமாக அமைந்துள்ள மைதானத்தில் மரக்கட்டைகள் நன்கு அடுக்கப்பட்டுத் தீயும் மூட்டப்பட்டுக் கட்டைகள் நன்ருக எரிந்து செந் தணலாகக் காட்சிதரும். அருகில் செல்ல அனற்காற்று வீசும்.

மேள வாத்தியங்களின் இன்னிசையும், அன்பர்களின் அரோஹராச் சத்தமும் வானைப்பிழக்க, அன்னையின் திருவு ருவை நெஞ்சில் இருத்தி அவளது திருநாமங்களை உச்ச ரித்த வண்ணம் அடியார்கள் வீதியை வலம்வந்து அனல் கக்கும் செந்தணலின் மீது நடந்து செல்வார்கள். தீ மிதிப்பு வைபவம் நடைபெறும் இடத்தைச் சூழ்ந்துநிற்கும் மக்கள் வியப்புடன் நோக்குவார்கள். அடியார்கள் அனலின் மீது நடந்துசெல்லும்போது இந்த அன்னையின் திருவருளே அவர்களுக்குத் துணையாக நின்றபடியால் அவர்களுக்கு எவ் விதமான தீங்கும் இதுவரை ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இவ்வாலயத்தின் உட்சுற்றுப் பிரகாரத்தில் மேற்குப் பக்கமாக உள்ள வேப்ப மரத்தில் நாகபூஷணி அம்மன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருப்பதாகவும் அதற்கு நீண்டகாலமாக அடியார்கள் பொங்கல் பூசை செய்து வழிபட்டு வந்ததாகவும் அறியக் கூடியதாக இருக்கிறது. 1985 ம் ஆண்டில் ஒரு நாள் அன்பர் குகதாசன் என்பவரின் கனவில் அம்பிகை தோன்றி அந்த வேப்ப மரத்தடியில் ஆலயம் ஒன்று தனக்கு அமைத்துத் தருமாறு கேட்டதாகவும், அதனைக் குருக்கள் ஐயாவுக்கு எடுத்துக்கூறி அவருடைய சம்மதத்துடன் குறுகிய காலத்துக்குள் அந்தத் திருப்பணியை அன்பர் குகதாசன் நிறைவேற்றிக் கொடுத்தார். 1986 ம் ஆண்டு பங்குனி மாதம் புனர்பூச நட்சத்திரத் தினத்தன்று கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது.

அன்பர் குகதாசனின் கனவில் தோன்றியது போலவே அம்பிகை, சிவலோகநாதக் குருக்கள் அவர்களின் கனவிலும் தோன்றி, ஆரம்ப காலம் தொடக்கம் வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவம் வரக்கூடியதாகப் பத்து நாட்கள் நடைபெற்று வந்த மகோற்சவ காலத்தை ஆனி உத்தர தினத்தன்று தீர்த்தோற்சவம் வரக்கூடியதாக மாற்றி அமைக்கும்படி முத்துமாரி அன்னை கேட்கவே குருக்கள் ஐயாவும் அதற்கேற்ப மகோற்சவ காலத்தை மாற்றியமைத்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அன்னை முத்துமாரியின் ஆலயமும் நன்கு வளர்ச்சியடையத் தொடங்கியது. இஃதன்றி அன்னையின் அருட்பிரவாகம் பன்மடங்கு பெருகி, அயற்கிராமங்களிலிருந்தும் பக்தர்கள் அன்னையைத் தரிசிப்பதற்கும், அவளின் அருளைப் பெறுவதற்கும் நாளாந்தம் வந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குருக்கள்
அவர்களுடன் நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. திருப்பணிகள்

இவ்வாலயத்தின் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாக இருந்து வந்த காலஞ்சென்ற சிவாகம கிரியா பூஷணம் சிவ ஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள் அவர்களின் அயராத முயற்சியினுல் அம்பிகை அடியார்களின் துணை கொண்டு பல திருப்பணி வேலைகள் நிறைவேறியுள்ளன.

அன்னை முத்துமாரியின் ஆலயப் பொலிவுக்கும், அதன் சிறப்புக்கும் காரணகர்த்தாவாக விளங்கியவர் அமரர் சிவலோகநாதக் குருக்களே ஆவார். அன்னாரின் அயராத முயற்சியினுலே இன்று இவ்வாலயம் சீரும் சிறப்பும்பெற்று விளங்குகிறது. அன்னையின் பணிக்கே தன்வாழ்வை அர்ப்பணித்த இப்பெரியாரை இத்தருணத்தில் நினைவுகூரவேண்டியது எமது கடமையாகும். ஆலயத்தின் சிறப்பைக் கூறும்பொழுது அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அந்தப் பெருந்தகையான குருக்கள் ஐயா அவர்களையும் அவரின் சிறப்பையும் கூருவிடில் அந்தச் சிறப்புரை பூரணமற்றதாகும்.

இந்நாட்டில் நாம், சித்தர்கள் அருளாளர்களைத் தேடித் தூர இடங்களுக்கு அலையத் தேவையில்லை. எமது கண்முன்னே 1987ம் ஆண்டு வரை உருவமாக இருந்து இன்று அருவமாக எமது உள்ளங்களில் எழுந்தருளியிருக்கும் குருக்கள் ஐயாவும் அருளாளர்களில் ஒருவரே. எனவே, அவரைத் தினமும் உள்ளத்தில் வைத்துப் பூசிப்பது அம்பாளின் அருட்சக்தியைப் பெற ஆற்றுப்படுத்த உதவும். அத்துடன் அவருக்குசெய்யும் சிறந்த பாதபூசை, நித்திய பாதபூசையாக அமைய அடியார்கள் எல்லோரும் சேர்ந்து குருக்கள் ஐயா அவர்களுடைய எண்ணத்தில் தோன்றிய அம்பாள் சந்நிதியின் கோபுரத்தைக் கட்டி எழுப்புவதே ஆகும். 'சிவாகம கிரியா பூஷணம்' சிவலோகநாதக் குருக்கள் அவர்கள் அமரத்துவம் அடைந்தபோது "நாடு போற்றும் சக்தி உபாசகர்" என்ற தலைப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நினைவு மலருக்கு அடியேனால் எழுதி வழங்கப் பட்ட கட்டுரை ஆலய வரலாற்றில் இடம்பெறுவது மிக வும் பொருத்தமானதே எனக் கருதி அதனையும் இந் நூலில் சேர்த்துள்ளேன்.

விநாயகப் பெருமானுக்கும், வைரவருக்கும், சண்டே சுவரருக்கும் தனித்தனியே பரிவாரக் கோயில்கள் 1970ம் ஆண்டில் பொது மக்களின் நிதி உதவியுடன் நிர்மாணிக் கப்பட்டு 1971ம் ஆண்டு சித்திரை மாதம் பூர நட்சத்தி ரத்தில் குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடைபெற்றது வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு 1977ம் ஆண்டு ஆலயம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதே ஆண்டில் சனீஸ்வரனுக்கும் கோயில் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது குறிப்பி டத்தக்கது. அம்பாள் அடியார் ஒருவர் இத்திருப்பணிக்கு நிதி உதவி அளித்தது மட்டுமன்றி முருகன் வள்ளி தெய்வ யானை உற்சவ மூர்த்திகளையும் தனது உபயமாக உரு வாக்கிக் கொடுத்துள்ளார்.

1985 ம் ஆண்டின் இறுதியில் துர்க்கா தேவி, நாக பூஷணி, சந்தானகோபாலர் ஆகியோருக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு 1986ம் ஆண்டு (குரோதன வருஷம்) பங் குனி மாதம் புனர்பூச நட்சத்திரத் தினத்தன்று குட முழுக்கு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் துர்க்கை அம்மன் எழுந்தருளி விக்கிரகத்துக்கும் (உற்சவ மூர்த்தி) சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்ற தோடு சாயந்தரம் பூந்தண்டிகையில் மகிடாசுரமர்த்தனி வெளிவீதி திருவுலா வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத் தருளினார். சரஸ்வதி, இலட்சுமி விக்கிரகங்கள் அன்பர் ஒருவரால் தமது உபயமாக இவ்வாலயத்துக்கு வழங்கப் பட்டது.

அன்னை முத்துமாரியும் பரிவார மூர்த்திகளும் பவனி வருவதற்கென அடியார்களால் மனமுவந்தளிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு உள் வீதியில் தெற்குப் பக்கமாக வாகன சாலையொன்றும் அமைக்கப் பட்டது. இந்த வாகன சாலையில் காணப்படும் வாகனங் களின் அழகு அனைவரையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அத்துடன் உட்பிரகார மண்டபத் திருப்பணி வேலைகள் யாவும் மிகவும் குறுகிய காலத்தில் நிறைவேற்ற அன்னை முத்துமாரியின் திருவருள் கைகூடியது வியந்து போற்றுதற்குரியதாகும். அடியார்கள் பலரும் தாமாகவே முன்வந்து அன்பளிப்புச் செய்ததோடு வேண்டிய ஒத் துழைப்பும் நல்கியமை பாராட்டப்பட வேண்டிய தொன் றாகும்.

இவ்வாலயத்தின் உட்பிரகாரத்தின் தென்புறமுள்ள சுவரை மகிடாசுரமர்த்தனி, அபிராமி, ஸ்ரீ நாகபூஷணி, மற்றும் அட்டலட்சுமிகளான ஆதிலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி மஹா லக்ஷ்மி, வீரலக்ஷ்மி எனத்தேவியின் பல்வேறு வடிவங்களைப் பிரதிபலிக்கும் அருள்மிகு ஓவியங்கள் அழகுபடுத்துகின்றன இந்த வண்ண ஓவியங்களை வரைந்தவர்: ஆசிரியர் செ. சிவப்பிரகாசம் அவர்கள் ஆவார். அன்னாரின் கை வண்ணத்தில் உருவாகியுள்ள ஓவியங்களை ஆலயத்துக்கு வரும் அடியார்கள் கண்டுகளிக்கத் தவறுவதேயில்லை அத்துடன் அண்மையில் வரையப்பெற்ற "காயத்திரிதேவி" 'அர்த்தநாரீஸ்வரர்' ஓவியங்களும், மற்றும் உள்வீதியின் வடக்குப்பக்கச் சுவரில் காணப்படும் 'பிராஹ்மி', 'மாஹேஸ் வரி' கௌமாரி', 'வைஷ்ணவி', முத்துமாரி, "வாராஹி மாகேந் திரி, 'சாமுண்டி' 'சிவதுர்க்கா' என அம்பிகையின் அருள் வடிவங்களைப் பிரதிபலிக்கும் வண்ண ஓவியங்களும் ஆலயத் துக்குச் செல்லும் அன்பர்களது கவனத்தைத் தன்பால் ஈர்க்குந் தன்மையன. "மணியம்", "மேரு" ஆகிய கலைஞர்களின் கைவண்ணத்தில் உருப்பெற்ற இந்த ஓவி யங்கள் வடக்குப்புறச் சுவரை அலங்கரிக்கின்றன. வசந்த மண்டபமும், யாகசாலையும் புனர் நிர்மாணம் செய்யப் பெற்றுக் கல்வியங்காட்டு" ஓவியர்திலகம்" 'விஸ்வம் நடரா ராசாவின் கைவண்ணத்தில் உருவான கண்கவர் ஓவியங் களினால் புதுப் பொலிவுபெற்றுத் திகழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கண்டாமணிக் கோபுரம்

முன்பிருந்த கண்டாமணிக் கோபுரம் பழுதடைந்திருந்தமையால் அதற்குப் பதிலாக அதே இடத்தில் புதிதாக ஒரு கண்டாமணிக் கோபுரம் அமைப்பதற்கு அம்பாளின் அடியார்கள் முன்வந்தனர். 1988ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு சுபமுகூர்த்தத்தில் அத்திபாரமிடப்பட்டுக் குறுகிய காலத்திற்குள்ளேயே இத்திருப்பணி இனிது நிறைவேற அம்பாள் திருவருள் கைகூடியது பெரும் வியப்புக்குரியதாகும். 1989ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாந்திகதி வியாழக்கிழமை பகல் பத்து மணிக்கும் நண்பகல் பன்னிரண்டு மணிக்கும் இடையேயுள்ள சுபமுகூர்த்தத்தில் கண்டாமணிக் கோபுரக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.


சிவஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள் அவர்களின் மறைவிற்குப்பின் அவரது புத்திரர்கள் மதிப்புக்குரிய சிவ. பாலசுப்பிரமணியக் குருக்கள், தேவராஜ ஐயர், இராஜேந்திரக் குருக்கள், கிருபாகரக் குருக்கள் ஆகியோர் ஆலயத்தை மேன்மேலும் அழகுபடுத்துவதற்கு அயராது உழைத்துவந்துள்ளனர். திருநெல்வேலிப் பெருங்குடி மக்கள் பலரும் அவர்களுக்கு உறுதுணையாக நின்று பலவழிகளிலும் உதவிபுரிந்து வந்துள்ளதோடு, தங்களது ஒத்துழைப்பையும் அளித்துவந்துள்ளனர் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாலயத்தின் திருப்பணிகளில் அநேகமானவை அன்னையின் திருவருளாலும், அன்பர்களது பூரண ஒத்துழைப்பினுலும் இனிது நிறைவேறியுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியது. மேலும், சிவலோகநாதக் குருக்களின் மகன் பால சுப்பிரமணியக் குருக்கள் 1990 ம் ஆண்டு மே மாதம் 15ந் திகதி அமரத்துவம் அடைந்ததும், அவரது சகோதரர்கள் மூவரும் திருநெல்வேலி வாழ் மக்களின் ஆதரவுடன் இந்த ஆலயத்தைத் திறம்படப் பரிபாலித்து வருவது பாராட்டப்படவேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



## இரு முக்கிய திருப்பணிகள்

இவ்வாலயத்தில் செய்து முடிக்கவேண்டிய முக்கியமான இரண்டு திருப்பணிகள் உள்ளன. முதலாவதாக, சித்திரத் தேர்த் திருப்பணி. இத்திருத்தலத்தில் அடியார்கள் மீது கொண்ட பெருங்கருணையினுல் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாகிய ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் இரதாரோகணத் திருக்காட்சியைப் புதிய அழகிய சித்திரத் தேரில் வைத்துப் பார்க்கவேண்டும் என்ற பெருவிருப்பம் மெய்யடியார்களின் உள்ளங்களில் நீண்டகாலமாகவே பதிந்துள்ளது என்பது யாவரும் அறிந்ததே.


மெய்யடியார்களின் நீண்டகாலப் பெருவிருப்பம் நிறைவு பெறத் திருவருளின் கருத்துக்கமையவே இந்த மேலான திருத்தேர்த் திருப்பணி கடந்த 25-5-1994ல் ஆரம்பித்துத் துரிதமாக நடைபெற்று வருகிறது. அன்னையின் அடியார்களும் மற்றும் பணவசதி படைத்தவர்களும் முன்வந்து தாராளமாக உதவினுல் இந்தத் திருப்பணியைக் கூடிய விரைவில் அம்பாளின் துணையுடன் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இரண்டாவது திருப்பணி இராசகோபுரம் அமைக்கும் பாரிய திருப்பணி ஆகும். திராவிடக் கட்டடக் கலைமரபைப் பிரதிபலிக்கக்கூடியதும், அழகிய சிற்ப வேலைப்பாடுகளும் கொண்ட இராஜ கோபுரம் ஒன்று ஆலய முன்வாயிலில் அமைப்பதற்கு அன்னை முத்துமாரி திருவருள் பாலித்திருக்கிருள், என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு விரைவில் அதற்கான திருப்பணி வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பதையும் அறியத்தருகிறேன். ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கு நேராக இருக்கும் பெருவாயிலின் மேலமையும் கோபுரமே இராஜ கோபுரம் என அழைக்கப்படுகின்றது. மற்றைய கோபுரங்களைக் காட்டிலும் இராஜ கோபுரம், உயரத்திலும் தோற்றத்திலும் சற்று அதிகமாக இருக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியாகும். நெடுந்தூரத்திலிருந்து நோக்கினாலும் நமது கண்ணையும் கருத்தையும் கவரக்கூடியதாக அற்புதமான சிற்பவேலைப்பாடுகளுடன் இராஜ கோபுரம் அமைக்கப்பட வேண்டும். 'கோபுர தரிசனம் பாபவிமோசனம்' என்றும், 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்றும் கூறுவர். இராஜ கோபுரத்தை தூல லிங்கம் என்றும் சொல்லு வார்கள். நமது கண்களுக்கு அது தென்படும் பொழுது அதனையே தெய்வ சொரூபமாக நினைத்து நாம் வணங் குதல் வேண்டும். தூரத்தில் இருப்பவர்களுக்கும் தெய்வ சிந்தனையை ஏற்படுத்தவே அது அமைந்துள்ளது கோபுரம் மிகவும் உயர்ந்து விளங்குவதால் கிராமத்துக்குப் புதிதாக வருபவருக்கும் ஆண்டவன் சந்நிதி எங்கே இருக்கிறது என்பதைப் பல மைல்களுக்கப்பால் இருந்தே அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட இரண்டு திருப்பணிகளையும் அன்பர் களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்குமேயானால் விரை வில் செய்து முடிக்கலாம். எனவே இந்தத் தெய்வத் திருப்பணியில் அம்பாளின் அடியார்கள் அனைவரும் பங்கு பற்றி அன்னையின் அருட்பேற்றைப் பெறுவார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. அம்பிகை அபிராமிப் பட்டருக்கு அருள் புரிந்தமை

பல்வகை வளமும் பெற்றுப் புகழ்படைத்தநாடு சோழநன்னாடு. இந்தச் சோழநாட்டிலே காவிரி நதியின் தென் கரையில் உள்ளது திருக்கடவூர். இயற்கை எழிலும் தெய்வத் தன்மையும் நிறைந்து விளங்கும் இத்திருப்பதி, நாயன்மார்களால் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்தது. மார்க்கண்டேயருக்காக காலனைக் காலாற் கடிந்த எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் திருத்தலம். இந்தத் தலத்தில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பவள் அபிராமி. கணப் பொழுதும் அன்னையை மறவாத சிந்தையராய் வாழ்ந்துவந்தவர் அபிராமிப்பட்டர். இளமைப் பருவத்திலே பல கலைகளையும் கற்று சிறந்து விளங்கிய அபிராமிப்பட்டர், திருக்கட ஊரிலே எழுந்தருளியிருக்கும் அம்பிகையை நாள்தோறும் சென்று வழிபட்டு வந்தார். கருவிலே திருவுடையராக விளங்கிய அவர், அல்லும்,பகலும் அநவரதமும் அப்பெருமாட்டியின் தியானமாகவே இருப்பார். இசைக்கலையிலே வல்லவராய் அம்பிகையின் அருளானந்தத்திலே திளைத்து அன்னையின் புகழ் பாடுவதிலேயே காலத்தைக் கழித்து வந்தார்.

அக்காலத்தில் மஹாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்த சரபோஜி மன்னர் தஞ்சாவூரை ஆட்சிசெய்துவந்தார். இவர் தெய்வ பக்தி மிகுந்தவர். தை அமாவாசைத் தினத்தன்று ஒரு நாள் காவேரி சங்கமத்தில் ஸ்நானம் செய்வதற்காகத் தமது பரிவாரங்களுடன் சரபோஜி மன்னர் காவிரிப்பூம் பட்டினம் வந்து சேர்ந்தார். நீராடி முடிந்ததும் திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் அமுதகடேசரையும் அன்னை அபிராமியையும் தரிசனம் செய்யவேண்டும் என்ற பேராவலினுல் திருக்கோவிலுக்கு வந்து அம்மையையும் அப்பனையும் வழிபாடு செய்தார். அபிராமி அன்னையின் சந்நிதிக்கு மன்னர் வந்த போது அம்பிகையின் தியானத்தில் மூழ்கியிருந்த அபிராமிபட்டருக்கு அரசரின் வருகை தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையின் தரிசனத்தை முடித்துக் கொண்டு வந்த சரபோஜி மன்னர் சிறிது நேரம் நின்று அபிராமிபட்டரைக் கவனித்தார். அவரது புரையற்ற தோற்றமும் ஒளி வீசும் முகமும் மன்னரைக் கவர்ந்தன. இவ்வுலக நினைவு ஏதுமின்றி கண்களை மூடியபடி அவர் தியானத்தில் ஆழ்ந்திருப்பதை மன்னர் அவதானித்து ஆச்சரியம் அடைந்தார். அருகில் இருந்தவர்களிடம் இவர் யார்? என்று கேட்கவே "இவர் ஒரு பித்தர்" ஏதோ ஒரு துர்த்தேவதையை ஆராதனை செய்து வருகிறார் எனக் கூறினர். எப்படியும் இவருடன் பேச வேண்டும் என்று விரும்பிய மன்னர் அபிராமிபட்டர் தியானத்தில் இருந்து விழித்ததும் இன்று என்ன திதி? எனக் கேட்டார். அம்பிகையை ஒளி வடிவாகக் கண்டு அந்தப் பேரின்பத்தில் ஆழ்ந்து இன்புற்றுக் கிடந்த இவர் மன்னரின் கேள்விக்கு உடனே, இன்று பௌர்ணமி திதியல்லவா என்று நிதானம் தவறிப் பதில் அளித்தார். அருகில் இருந்தவர்கள் அபிராமி பட்டரின் கூற்றைக் கேட்டு நகைத்தனர்.

மன்னர் அவ்விடத்தை விட்டு அகன்றதும் அபிராமி பட்டர் தியானம் கலைந்து எழுந்தார். நடந்தவற்றை உணர்ந்து பெரிதும் கவலையடைந்தார். தாம் பௌர்ணமி என்று கூறியது தவறு என்று சிந்தித்து "என்றென்றும் என் உயிருக்கு உற்ற துணையாக விருக்கும் அன்னை அபிராமி தேவியே அடியேனைக் காத்தருள வேண்டும்" என்று அத்தேவி சந்நிதியில் பேராய் காதலாகிக் கசிந்துருகி வேண்டினார். அத்துடன் அவர் நின்று விடவில்லை. ஒரு பெரிய குண்டம் வெட்டி அதில் பெரு நெருப்பு மூட்டினார். அக்குண்டத்தின் நான்கு பக்கங்களிலும் நாட்டிய இரும்புக் கால்களின் மீது இரும்புக் கம்பிகளினால் விட்டம் பூட்டினார் அதில் நூறு புரி கொண்ட பெரிய உறியைக் கட்டி அவ்வுறியின் மேல் இருந்து கொண்டு அம்பிகையை வேண்டி அந்தாதி பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு புரியை அறுத்துக் கொண்டே வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIV

இவ்வாறு பாடிக் கொண்டே ஐம்பது பாடல்களுக்கு மேல் பாடி விட்டார். அஸ்தமனமும் ஆயிற்று. அப்போது எழுபத்தொன்பதாவது பாடலாகிய,

" விழிக்கே அருளுண்டு அபிராமி வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே'

என்று பாடி முடித்ததும் அபிராமிதேவி அவருக்கு ஆனந்த சொரூபிணியாய் ஞானப்பிழம்பாய்க் காட்சி கொடுத்து அருள்புரிந்தார். அம்பிகை தன் காதில் உள்ள திருத்தோட்டைக் கழற்றி கீழ்த்திசையில் வீச அதுஅங்கே சென்று பூரண சந்திரனைப் போலப் பிரகாசித்தது. இந்த அற்புதத்தைக் கண்ட சரபோஜி மன்னர் ஆச்சரியமடைந் தவராய் அபிராமி பட்டருடைய வாக்கை காப்பாற்றும் பொருட்டு அம்பிகையே இந்தத் திருவிளையாடலைச் செய் திருக்கிறு என்று துணிந்தார். அபிராமிப்பட்டரைத் தரிசிப் பதற்கு மன்னர் விரைந்தார். அடியேன் செய்த தவறை பொறுத் தருள வேண்டும் என்று மன்னர் வேண்டினுர்.

தேவி தமக்கு அருள் செய்ததை எண்பதாவது பாட்டிலே வியந்து பாடத் தொடங்கிய அபிராமிபட்டர் தொடர்ந்து பாடி அபிராமி அந்தாதி நூறு பாடல்களையும் பாடி முடித்தார். மகிழ்ச்சியுற்ற மன்னர் இவருக்கு சிலமானி யங்களை வழங்கினுர். அபிராமிபட்டரோ தனக்கு தேவியின் திருவருளன்றி வேறென்றும் வேண்டுவதில்லை என்று மறுத் துரைக்க மன்னர்" தங்கள் சந்ததியாரின் நன்மை கருதி இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று மன்ருடினுர் அதற்கு அபிராமி பட்டர் மனமிரங்கி சம்மதம் தெரி வித்து அந்த மானியங்களை ஏற்றுக் கொண்டார்.

அபிராமி தேவி தமக்கு காட்சி கொடுத்ததை நினைத்து நினைத்து நெஞ்சம் உருகிய அபிராமிப்பட்டர் மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முன்னரைக் காட்டிலும் பக்தி சிரத்தையுடன் தேவியை வழிபட்டு வருவாராயினர். சிறந்த அநுபூதிமானாக விளங்கிய அபிராமிபட்டர் சிலகாலத்தின் பின்னர் தேவியின் திருவடி நிழலை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

அபிராமி அந்தாதியைத் தினமும் காலையிலும் மாலையிலும் ஓதி வருபவர்கள் இம்மையில் சகல செல்வங்களும் பெற்று மறுமையில் முத்திப்பேறும் அடைவார் என்பது உறுதி.

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே

– தேவி மஹாத்மியம்

(எல்லா மங்களங்களிலும் மங்களப் பொருளாய் விளங்குபவளே!
எல்லா நன்மைகளையும் அளிப்பவளே!
எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விப்பவளே!
சரணடைதற்குரியவளே! நாராயணி
தேவியே உனக்கு நமஸ்காரம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. நாடு போற்றும் சக்தி உபாசகர்

சிவஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள் அவர்கள் களங்கமில்லாத அன்புள்ளம் படைத்தவர். நற்பண்பாளர்; சாந்தமே உருவானவர். தனக்கென வாழாத பெரும் பண்பு படைத்தவர். அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருட்பேறுபெற்றவர். நல்வழியில் பொருளை ஈட்டிப் பல்வகை அறங்கள் புரிந்து நன்மக்கட்பேறு பெற்றவர். ஆகமந்தந்த அரும் பெரும் கிரியைகள் அனைத்துங்கற்று அறிவின் சிகரமாய்த் திகழ்ந்தவர். கிரியைகளை நெறி தவருது சிறப்புடன் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர். அத்தனைக்கும் மேலாக அன்னை முத்துமாரி அம்பாளை அன்புடன் அர்ச்சிப்பதற்கும் அவள் வீற்றிருக்கும் ஆலயத்தைப் பல்வேறு திருப்பணி வேலைகள் செய்து அழகுபடுத்துவதற்கும் தமது வாழ்வையே அர்ப்பணித்தவர். இன்று இந்த ஆலயம் புதுப் பொலிவு பெற்று விளங்குவதற்கு குருக்கள் அவர்களின் அயராத சேவையே காரணம் என்று கூறுவது மிகையாகாது. சுருங்கக்கூறின் இப்பெரியார் தமது வாழ்வை முத்துமாரி அம்பாள் ஆலயத்துடன் ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

இன்சொல், இன்செயல், புன்சிரிப்பு மூலம் அனைவரதும் உள்ளத்தைக் கவர்ந்த இப்பெரியார் 1920 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ந் திகதி பிறந்தார். தந்தையார் – கந்தையா ஐயர். தாயார் – திருமதி சின்ஞச்சி அம்மை. திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்டு உயர் கல்வி பெறுவதற்காக திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் தொடர்ந்து கல்விகற்று 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி சகல பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றுர். கல்விச் செல்வத்தின் தனிப்பெருஞ் சிறப்பை நன்குணர்ந்த ஐயா அவர்கள் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பாலபண்டித பரீட்சைக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்ற விரும்பி திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி யில் நடைபெற்ற வகுப்பில் சேர்ந்து பண்டிதமணி சி.கண பதிப்பிள்ளை அவர்களிடம் இலக்கிய இலக்கணத்தை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார். அத்துடன் கோப்பாய் சுப்பிரமணியக் குருக்களிடம் சமஸ்கிருதமும் பயின்று அம் மொழியில் பாண்டித்தியமும் பெற்றார். சோதிடக்கலை யில் உள்ள ஈடுபாட்டினால் கொக்குவில் இரகுநாதையர் அவர்களிடம் சோதிடம் கற்று சில ஆண்டுகள் பஞ்சாங் கம் கணிப்பதிலும் ஈடுபட்டார்.

தமது 24 ஆம் வயதில் மங்கையர் போற்றும் மகேஸ் வரியை, திரு. குமாரசுவாமி-திருமதி கண்ணம்மா தம்பதி களின் தவப்புதல்வியைத் தமது வாழ்க்கைத் துணைவி யாகப் பெற்று இல்லறம் என்னும் நல்லறத்தினை செவ் வனே நடத்தி வந்தார். அன்பும் அறனும் கொண்டு நடத் திய இல்வாழ்க்கையின் பயனாக ஆறு புத்திரர்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்.

1955 ஆம் ஆண்டு இப்பெரியாரின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அன்னை முத்துமாரி அம்பாளின் அருட்கடாட்சத்தினால் குருப்பட்டம் கிடைக்கப் பெற்று ஆலயத்தின் பிரதம குருவாகி அகிலபுவன மாதாவுக்குச் சேவை செய்வதிலே பேரின்பம் பெற்றுவந்தார்.

1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலய கும்பா பிஷேக வைபவத்தின் போது அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் அவையினரால் ''சிவாகம கிரியா பூஷ ணம்'' என்னும் கௌரவப் பட்டம் இப்பெரியாருக்கு வழங்கப்பட்டது.

குருக்கள் அவர்கள் தமது சிரேஷ்ட புத்திரன் சிவத் திரு சி. பாலசுப்பிரமணியனுக்கு 18-6-86ல் குருப்பட்டம் சூட்டி மகிழ்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 ஆம் ஆண்டில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற விழாவின் போது இப்பெரியாரைக் கௌரவிக்குமுகமாக ஆறுமுகநாவலர் சபையினரால் ''சைவக்கிரியா மாமணி'' என்னும் சிறப்புப்பட்டம் வழங்கப் பட்டது.

இப்பெரியார் பிரதம குருவாய் இருந்து சிறப்புற நடத்தி முடித்த ஆலய கும்பாபிஷேகங்கள் பலவற்றுள்ளும், கஞவாஞ்சிக்குடி ஸ்ரீமகா விஷ்ணு ஆலயம், குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம், ஏழாலை கண்ணகி அம்மன் ஆலயம், குரும்பசிட்டி கணபதி ஆலயம், அச்சுவேலி பத்தமேனி சித்திவிநாயகர் ஆலயம், கட்டுவன் முத்துமாரி அம்மன் ஆலயம், ஆரையம்பதி பரமநயினார் ஆலயம், நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயம், பருத்தித்துறை தம்பசிட்டி சித்திவிநாயகர் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

எங்கள் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்கள் அறுபத்தேழு ஆண்டுகள் இவ்வுலகில் இனிது வாழ்ந்து ஆண்டுச் சுற்று வட்டத்தில் இறுதி ஆண்டான அக்ஷய வருடம் பங்குனி மாசம் கடைசித் திங்களும் பௌர்ணமியும் சேர்ந்த நன்னாளில் சிவசக்தியுடன் இரண்டறக் கலந்து விட்டார்.

இப்பெரியாரின் இலட்சியத்தின் வழிநின்று அன்னை முத்துமாரியின் திருப்பணியைத் தொடர்ந்து செய்து வருவதே நாம் அவருக்குச் செய்யும் சிறந்த பாதபூசையாகும்.

**சிவஸ்ரீ க. சிவலோகநாதக்குருக்கள் அவர்களின்**

**நாமம் என்றென்றும் வாழ்க!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

## ஸ்ரீ அபிராமி பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

### காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே

### நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக மூணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. (1)

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. (2)

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. (3)

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. (5)

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. (6)

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. (7)

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே. (8)

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. (9)

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. (10)

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிய துன்புகழ் கற்றதுன் ஞமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. (12)

பூத்தவ ளேபுவ னம்பதி ஞன்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் ருேர்தெய்வம் வந்திப்பதே.(13)

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. (14)

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்ருே
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. (15)

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிடமே யெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
யளியே னறிவள விற்கள வான ததிசயமே. (16)

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணைவிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர் தம்
மதிசய மாகவன் ருேவாம பாகத்தை வவ்வியதே. (17)

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்ட பொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே (18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வொளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. (19)

உறைகின்ற நின்றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ் சமோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. (20)

மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயி றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. (21)

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே (22)

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. (23)

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. (24)

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மறவா மனின் றேத்துவனே. (25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றுளிணைக்கென்
னுத்தங்க புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே (26)

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. (27)

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. (28)

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. (29)

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண்டாய் கொண்டதல்லவெ
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட் (ன்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. (30)

உமையு முமையொரு பாகரு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமயங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. (31)

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. (32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
யுழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்பனோடி வந்தே. (33)

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. (34)

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. (35)

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. (36)

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. (37)

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. (38)

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பான்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கண்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றோமுன்செய் புண்
ணியமே. (40)

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே (41)

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. (42)

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொற்
றிரிபுர சுந்தரி சிந்துர மேனிய ளைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. (43)

தவளே யிவளெங்கள் சங்கர ஞர்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையிஞ
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந் [செய்தே]
துவளே னினிபொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு (44)

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கை நன் றேபின் வெறுக்கை
யன்றே. (45)

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் ருனிடப் பாகங் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்து
வனே. (46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே (47)

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. (48)

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே (49)

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே. (50)

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர் தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. (51)

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிரலை யாரம் பிறைமுடித்த
ஐயன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. (52)

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. (53)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. (54)

மின்னு பிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னு ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னு தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே (55)

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்று ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றுது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்று லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. (56)

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர் தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமா லையுங்கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. (57)

அருணம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணம் புயமுலைத் தையலல் லாடகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமுங் கராம்புயமுஞ்
சரணம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. (58)

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. (59

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம் வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. (60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே. (61)

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகநகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. (62)

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந் தறிகுறிக்குஞ்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. (63)

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. (64)

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. (65)

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே. (66)

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. (67)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரும் புனலுங் கனலும் வெங் காலும் படர்விசும்பு
மூரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. (68)

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. (69)

கண்களிக் கும்படி கண்டுகொண்டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. (70)

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென் குறையே
(71)

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.
(72)

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே. (73)

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே. (74)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பகத் தாருவி னீழலிற் றுயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. (75)

குறித்தேன் மனத்தி னின்கோல மெல்லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெய்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே· [யிற்] (76)

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
ருயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. (77)

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே. (78)

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. (79)

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே. (80)

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே.
(81)

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
ஞெளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னே மறப் பேனின் விரகினையே. (82)

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே (83)

உடையாளை யொல்கு செம்பட் டுடையாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் செஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூ
லிடையாளை யெங்கள் பெம்மா னிடையாளை யிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. (84)

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடை யும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. (85)

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போதுவெளி நில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. (86)

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. (87)

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குட்
டரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. (88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVER...



சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே.
(89)

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. (90)

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. (91)

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே. (92)

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. (93)

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. (94)

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. (95

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழ வாரெழு பாருக்கு மாதிபரே. (96)

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே (97)

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே. (98)

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. (99)

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப்போது முதிக்கின்றவே
(100)

## நூற் பயன்

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழுவார்க்கொரு தீங்கில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஸ்ரீ லலிதா நவரத்னமாலை
## என வழங்கும்

# ஸ்ரீ புவனேஸ்வரி தோத்திரம்

### விநாயகர் வணக்கம்

ஆக்குந் தொழிலைந் தரனுற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரியால்
சேர்க்கும் நவரத்ன மாலையினை
காக்கும் கணநாயக வாரணமே.

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**வைரம்**

கற்றுந் தெளியார் காடே கதியாய் கண்மூடி நெடுங்கண வானதவம்
பெற்றுந் தெரியார் நினையென்னிலவம் பெருகும்பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப் பகைவர்க்கு எமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே.

**நீலம்**

மூலக் கனலே சரணம் சரணம் முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம் குன்றாத அருட்சுவையே சரணம்
நீலத்திரு மேனியிலே நினைவாய் நினைவற்றெளியேன் நின்றேனருளாய்
வாலைக்குமரீ வருவாய் வருவாய் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்து

முத்தே வருமுத்தொழி லாற்றிடவே முன்னின்று அருளும்
முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம் வேதாந்த நிவாசினியே
சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ சாகாத வரந்தரவே
வருவாய்
மத்தேறா சுத்திக்கினிவாழ் வடையேன் மாதா ஜெயஓம்
லலிதாம்பிகையே.

## பவளம்

அந்திமயங்கிய வானவிதானம் அன்னை நடஞ்செய்யும்
ஆனந்தமேடை
சிந்தை நிரம்பவளம் பொழிவாரோ தேம்பொழிலாமிது
செய்தவளாரோ
எந்தையிடத்து மனத்துமிருப்பா ளென்றுணர்பவர்க்
கருளெண்ண மிகுந்தாள்
மந்திர வேத மயப்பொருளானுள் மாதா ஜெய ஓம்
லலிதாம்பிகையே.

## மாணிக்கம்

காணக் கிடையாக் கதியானவளே கருதக்கிடையா
கலையானவளே
பூணக் கிடையாப் பொலிவானவளே புதுமைக்கிடையா
புதுமைத்தவளே
நாணித் திருநாமமும் நின்னருளும் கவிலாதவரை
நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய் மாதா ஜெயஓம்
லலிதாம்பிகையே.

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம் மதுரித பதமே
சரணம் சரணம்
சுரபதி மணியத் திகழ்வாய் சரணம் சுதிஜதிலயமே
இசையே சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரகரசிவ என்றடியவர்குழும அவரருள் பெற வருமமுதே
சரணம்
வரநல நிதியே சரணம் சரணம் மாதா ஜெய ஓம்
லலிதாம்பிகையே.

**கோமேதகம்**

பூமேவிய தான்புரியுஞ் செயல்கள் பொன்றுது பயன்குன்று
வரமும்
தீமேவிடினும் ஜெயசக்தியென திடமாயடியேன் பொழியுந்
திறமும்
கோமேதகமே குளிர்வானிலவே குழல்வாய் மொழிவே
தருவாய் தருவாய்
மாமேருவிலே வளர்கோகிலமே மாதா ஜெய ஓம்
லலிதாம்பிகையே.

**பதுமராகம்**

ரஞ்சனி நந்தினி அங்கனி பதுமராக மிகாஸ வியாபிணி
அம்பா
சஞ்சலரோக நிவாரணி வாணி சாம்பவி சந்திர கலாதரி
ராணி
அஞ்சன மேனி அலங்கிருத பூரணி அமிர்த சொரூபிணி
நித்தியகல்யாணி
மஞ்சுளமேரு சிருங்க நிவாசினி மாதா ஜெய ஓம்
லலிதாம்பிகையே.

**வைடூரியம்**

வலையொத்த வினை கலையொத்த மனம் மருளப் பறையா
கருவியொத்தவிதால்
நிலையற்றெளியேன் முடியத்தகுமோ நிகளந்துகளாக
வரந்தருவாய்
அலையற்றிசை வற்றறுபூதியு மற்றடியார் முடிவாழ்
வயிடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய் மாதா ஜெய ஓம்
லலிதாம்பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயன்**

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா நவரத்னமாலே
நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தியெலாம் அடைவார் சிவரத்தினமாய்
திகழ்வாரவரே

மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

சுபம்.

# ஸ்ரீ துர்க்கா தேவி தோத்திரம்

1. யாதேவீ ஸர்வ பூதேஷு விஷ்ணு மாயேதி சப்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை நமோ நம
2. யாதேவீ ஸர்வ பூதேஷு சேதனேத்ய பீதியதே
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமோ நம
3. யாதேவீ ஸர்வபூதேஷு: புத்திருபேணே ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
4. யாதேவீ ஸர்வ பூதேஷு நித்ராருபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமஸ்தஸ்யை: நமோ நம
5. யாதேவீ ஸர்வபூதேஷு க்ஷுதாருபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
6. யாதேவீ ஸர்வபூதேஷு சாயாருபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
7. யாதேவீ ஸர்வபூதேஷு சக்திருபேணே ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமோ நம
8. யாதேவீ ஸர்வபூதேஷு திருஷ்ணருபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமோ நம
9. யாதேவீ ஸர்வபூதேஷு க்ஷாந்திருபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை:நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. யாதேவீ ஸர்வபூதேஷு ஜாதிரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமோ நம
11. யாதேவீ ஸர்வபூதேஷு லஜ்ஜா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமோ நம
12. யாதேவீ ஸர்வபூதேஷு சாந்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
13. யாதேவீ ஸர்வபூதேஷுச்ரத்தா ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை நமோ நம
14. யாதேவீ ஸர்வபூதேஷு காந்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
15. யாதேவீ ஸர்வபூதேஷு லக்ஷ்மீ ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை; நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
16. யாதேவீ ஸர்வ பூதேஷுவ்ருத்தி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை நமோ நம
17. யாதேவீ ஸர்வ பூதேஷு ஸ்ம்ருதி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை : நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை நமோ நம
18. யாதேவீ ஸர்வ பூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமோ நம
19. யாதேவீ ஸர்வ பூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை; நமஸ்தஸ்யை: நமோ நம
20. யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை:நமோ நம
21. யாதேவீ ஸர்வ பூதேஷு ப்ராந்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை: நமஸ்தஸ்யை; நமஸ்தஸ்யை: நமோ நம

# துர்க்கை துதி

ஓரெட் டிதழ்வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே
வாரிப் படுநஞ் சமுதாக்கும் வால்வளைக்கை
வேரிக் கரும்பே வித்தின்றி விளை மூலமே. 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியா யந்தத்தி னந்தமாய் நின்ருேற்குப்
பாதியா யொன்ருய்ப் பலவாகிப் பல்லுயிராய்ப்
பேதியா நின்ருய் பெருமாட்டி நின்பெருமை
சோதியா நின்ருர்க் கெளிதன்றே துல்லபமே 2.

தோன்று சராசரங்க ளெல்லாந் தொடர்விடா
தேன்ற சிவமயமு நின்னன்றி யில்லையால்
ஆன்ற விருப்பி னருந்துவன வின்ருமேல்
ஊன்று சுவையுளவோ நந்தா வொளிவிளக்கே 3.

முச்செயலுங் காட்டி யவைபுரக்கு மூவரைத்தன்
இச்சையிற் காட்டியவ ருள்ளத்து மெட்டாயாற்
பச்சை யிளங்குதலைக் கிள்ளாய் பரையேநின்
விச்சையிவை யென்ருல் விடுத்துணர வல்லாரார் 4.

இருகுழை கோமளந் தாள்புட்ப ராகமிரண்டு கண்ணும்
குருமணி நீலங்கை கோமேதக நகங்கூர் வயிரம்
திருநகை முத்துக் கனிவாய் பவளஞ் சிறந்தவல்லி
மரகத நாமந் திருமேனியும் பச்சை மாணிக்கமே 5.

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரிநற்
றவமாரு மெய்யன்பர்க் கேயிடர் சூழுந் தரியலரை
அவமானஞ் செய்யக் கணங்களை யேவு மகேசரியிங்கு
தவமாக வந்தெனைக் காக்குந் திரிபுர நாயகியே 6.

பரங்கிரியின் மேவியருந் தவமிழைத்துப் பாருளோங்கித்
திரங்குலவு மவுணனையே வீட்டியவன் சிரம்மிதித்த
சிலம்பினளை
வரங்குலவு வேலவனுர் மணக்கோலங் கண்டிருந்த
மகிழ்ச்சியாளைக்
கரங்குலவு சங்காழி தரித்துவளர் துர்க்கைதனைக்
கருத்துள் வைப்பாம் 7.

— புராணம்.

உ

ஓம் ஜெய துர்க்காயை நம

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 1

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 2

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊறறு தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 4

திருமக ளாளுய் கலைமக ளாளுய்
மலைமக ளாளுய் துர்க் கையளே
பெருநிதி யாளுய் பேரறி வாளுய்
பெருவலி வாளுய் பெண் மையளே
நறுமல ராளுய் நல்லவ ளாளுய்
நந்தினி யாளுய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 5

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 6


கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கை யளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சி யளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
 சாரிணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
 மாதினி காத்யா யனிய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
 ஸித்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
 தாபநி வாரணி ஜெய துர்க்கா! 8

– துர்க்கைச் சித்தர்

உ

# இலக்குமி துதி

கொழுதியிசை யளி முரலுந் தாமரைமென்
 பொகுட்டிலுறை கொள்கைபோல
மழையுறழுந் திருமேனி மணிவண்ண
 னிதயமலர் வைகுமானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே
 கரகமல முகிழ்த் தெந்நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
 வருள் கொளிக்குங் கமலக்கண்ணாய்.

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
 செங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான்
 றனையீன்ற விந்தைதூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலுள்
 அவதரித்தோய் அன்பர்நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரே
 எனவணக்கஞ் செய்வான் மன்னோ

12629 SC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடற்கமல நறும் பொகுட்டி லரசிருக்குஞ்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாங் காவல்பூண்டான்
படைத்தனனுன் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன்றானுந்
துடைத்தனனின் பெருஞ்சீர்த்தி யெம்மனோ
ராலெடுத்துச் சொல்லற் பாற்றோ.

மல்லனெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் யாருங்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகில்
நீகரில்லாக் காட்சியோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர்தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையு மணியிழைநின்
னருணோக்க மடைந்துளாரே.

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின் மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள் துரக்கு மலர்க்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கமுலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்பதம்மா.

– புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சகல கலாவல்லி மாலை

## வெண்பா

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

## கட்டளைக் கலித்துறை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள்கரும்பே
சகலகலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந் தாய்
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரஸ்வதி தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி ஞசனஞ் சேர்
செல்விக் கரிதென் ரொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே

— குமரகுருபர சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சரஸ்வதி அந்தாதி

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத் தேவிசெஞ்சொற்
றார்தந்த வென்மனத் தாமரை யாட்டி சரோருகமேற்
பார்தந்த நாத னிசைதந்த வாரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதியம் போருகத் தாளை வணங்குதுமே.

வணங்குஞ் சிலைநுத லுங்கழைத் தோளும் வனமுலைமேற்
சுணங்கும் புதிய நிலவெழு மேனியுந் தோட்டுடனே
பிணங்குங் கருந்தடங் கண்களு நோக்கிப் பிரமனன்பா
லுணங்குந் திருமுன்றி லாய்மறை நான்கு முரைப்பவளே

உரைப்பா ருரைக்குங் கலைகளெல் லாமெண்ணி லுன்னை யன்றித்
தரைப்பா லொருவர் தரவல ரோதண் டரளமுலை
வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி மெல்லியளே

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்க ளேத்துதற்கு
முயலாமை யாற்றடு மாறுகின் றேனிந்த மூவுலகுஞ்
செயலா லமைத்த கலைமக ளேநின் றிருவருளுக்
கயலா விடாம லடியேனை யுமுவந் தாண்டருளே.

அருக்கோ தயத்தினுஞ் சந்திரோ தயமொத் தழகெறிக்குந்
திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பாவை திசைமுகத்தா
லிருக்கோது நாதனுந் தானுமெப் போது மினிதிருக்கு
மருக்கோல நாண்மல ராளென்னை யாளு மடமயிலே.

மயிலே மடப்பிடி யேகொடி யேயிள மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேயன்ன மேமனக் கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனதுபொற் பாதங்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென் சிந்தையுள்ளே
யேதாம் புவியிற் பெறலரி தாவ தெனக்கினியே.

இனிநா னுணர்வதெண் ணெண் கலை யாளையிலகுதொண்டைக்
கனிநாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக் கமலவயன்
றனிநா யகியை யகிலாண்ட மும்பெற்ற தாயைமணப்
பனிநாண் மலருறை பூவையை யாரணப் பாவையையே.

பாவுந் தொடையும் பதங்களுஞ் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதி யின்முதிய
நாவும் பகர்ந்ததொல் வேதங்க ளுன்கு நறுங்கமலப்
பூவுந் திருப்பதம் பூவா லணிபவர் புந்தியுமே.

புந்தியிற் கூரிரு ணீக்கும் புதிய மதியமென்கோ
வந்தியிற் றோன்றிய தீபமென் கோநல் லருமறையோர்
சந்தியிற் றோன்றுந் தபனனென் கோமணித் தாமமென்கோ
வுந்தியிற் றோன்றும் பிரான்புயந் தோயு மொருத்தியையே.

ஒருத்தியை யொன்று மிலாவென் மனத்தி னுவந்துதன்னை
யிருத்தியை வெண்கம லத்திருப் பாளையெண் ணெண்கலை
தோய்
கருத்தியை யைம்புல னுங்கலங் காமற் கருத்தையெல்லாந்
திருத்தியை யான்மற வேன்றிசை நான்முகன் தேவியையே.

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவ ராகியுள் ளோரு முனிவரரும்
யாவரு மேனைய வெல்லா வுயிரு மிதழ்வெளுத்த
பூவரு மாதி னருள்கொண்டு ஞானம் புரிகின்றதே.

புரிகின்ற சிந்தையி னூடே புகுந்து புகுந்திருளை
யரிகின்ற தாய்கின்ற வெல்லா வறிவின ரும்பொருளைத்
தெரிகின்ற வின்பங் கனிந்தூறி நெஞ்சந் தெளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண் கலைமா துணர்த்திய வேதமுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போத வுருவாகி யெங்கும் பொதிந்தவிந்து
நாதமு நாதவண் டார்க்கும்வெண் டாமரை நாயகியே

நாயக மான மலரக மாவது ஞானவின்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையா
லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார் சுவேத சரோருகமே.

சரோருக மேதிருக் கோயிலுங் கைகளுந் தாளிணையு
முரோருக முந்திரு வல்குலு நாபியு மோங்கிருள்போற்
சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழு
மொரோருக மீரரை மாத்திரை யான வுரைமகட்கே

கருந்தா மரைமலர் கட்டா மரைமலர் காமருதா
ளருந்தா மரைமலர் செந்தா மரைமல ராலயமாத்
தருந்தா மரைமலர் வெண்டா மரைமலர் தாவிலெழிற்
பெருந்தா மரைமணக் குங்கலைக் கூட்டப் பிணைதனக்கே.

தனக்கே துணிபொரு ளென்னுந்தொல் வேதஞ் சதுர்முகத்தோ
னெனக்கே சமைந்த வபிடேக மென்னு மிமையவர்தா
மனக்கேத மாற்று மருந்தென்ப சூடு மலரென்பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பாத கமலங்களே.

கமலந் தனிலிருப் பாள்விருப் போடங் கரங்குவித்துக்
கமலங் கடவுளர் போற்றுமென் பூவை கண்ணிற் கருணைக்
கமலந் தனைக்கொண்டு கண்டொரு காற்றங் கருத்துள்வைப்பார்
கமலங் கழிக்குங் கலைமங்கை யாரணி காரணியே.

காரணன் பாகமுஞ் சென்னியுஞ் சேர்தரு கன்னியரு
நாரண னுக மகலாத் திருவுமோர் நான்மருப்பு
வாரணன் றேவியும் மற்றுள்ள தெய்வ மடந்தையரு
மாரணப் பாவை பணித்தகுற் றேவ லடியவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவேத நாறுஞ் சிறப்பார்ந்த வேத ஷனத்தினுக்கு
முடிவே தவள முளரிமின் னேமுடி யாவிரத்(தி)ன
வடிவே மகிழ்ந்து பணிவார் தமதுமயிலிரவின்
விடிவே யறிந்தென்னை யாள்வார் தலந்தனில் வேறிலையே.

வேறிலை யென்று னடியாரிற் கூடி விளங்குநின்பேர்
கூறலை யானுங் குறித்துநின் றேனைம் புலக்குறும்பர்
மாறிலை கள்வர் மயக்காம னின்மலர்த் தாணெறியிற்
சேறலை யீந்தருள் வெண்டா மரைமலர்ச் சேயிழையே

சேதிக்க லாந்தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்க லாமுறப் போதிக்க லாஞ்சொன்ன தேதுணிந்து
சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்தி தானெய்தலா
மாதிக்க லாமயில் வல்லிபொற் றுளை யடைந்தவர்க்கே.

அடையாள நாண்மல ரங்கையி லேடு மணிவடமு
முடையாளை நுண்ணிடை யொன்றுமி லாளை யுபநிடதப்
படையாளை யெவ்வுயி ரும்படைப் பாளைப் பதுமநறுந்
தொடையாளை யல்லது மற்றினி யாரைத் தொழுவதுவே

தொழுவார் வலம்வரு வார்துதிப் பார்தந் தொழின்மறந்து
விழுவா ரருமறை மெய்தெரி வாரின்ப மெய்புளகித்
தழுவா ரினும்கண்ணி னீர்மல்கு வாரென்க ணுவதென்னை
வழுவாத செஞ்சொற் கலைமங்கை பாலன்பு வைத்தவரே

வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப் பொருளுமற் றெப்
பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும் பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளு மழியாப் பொருளும் விழுப்பொருளு
முய்க்கும் பொருளுங் கலைமா னுணர்த்து முரைப்பொருளே

பொருளா லிரண்டும் பெறலாகு மென்றபொருள்பொருளோ
மருளாத சொற்கலைவான்பொருளோ பொருள் வந்துவந்தித்
தருளாய் விளங்கு மவர்க்கொழி யாயறி யாதவருக்
கிருளாய் விளங்கு நலங்கினர் மேனியிலங்கிழையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்குந் திருமுக மெய்யிற் புளக மெழுங்கண்கணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும் பலிக்கு மனமிகவே
துலங்கு முறுவல் செயக்களி கூருஞ் சுழல்புனல் போற்
கலங்கும் பொழுது தெளியுஞ்சொன் மானைக் கருதினர்க்கே

கரியா ரளகமுங் கண்ணுங் கதிர்முலைக் கண்ணுஞ்செய்ய
சரியார் கரமும் பதமு மிதழுந் தவளநறும்
புரியார்ந்த தாமரை யுந்திரு மேனியும் பூண்பனவும்
பிரியாதென் னெஞ்சினு நாவினு நிற்கும் பெருந்திருவே.

பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென் பேதைநெஞ்சி
லிருந்தரு ளுஞ்செஞ்சொல் வஞ்சியைப் போற்றினெல் லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்ப வேதப் பொருளுந்தரும்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே,

—கம்பர்

உ

யாழ்ப்பாணம்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்

# திருப்பொன்னூசல்

(இயற்றியவர்: ச. தங்கமாமயிலோன்.)

## காப்பு

சீரார் திருநெல் வேலியதிற்
சிறப்பார் குழையோ டைப்பதியில்
நீரார் நெடுவயல் நிறைசோலை
நிழலார் முத்து மாரியம்மன்
சேரார் திருவளர் திருவூஞ்சல்
திகழிசை யமுதஞ் சிறந்திடவே
காரார் கயமுகக் கணபதியைக்
கருத்துட னுளுங் கைதொழுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

1. பூவார் சென்னிப் புனிதனருள்
பூக்குஞ் சைவப் புனல்பொங்க
நாவார் நெய்தேன் நறும்பொங்கல்
நானிலக் கனிவகை நாம்படைத்தே
பாவார் பழமறை யாகமங்கள்
பணிபூ ணணிவகை பதஞ்சேரத்
தேவார் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

2. நீர்மலி வேணியன் நிறையருளில்
நீரவர் சீரவர் நிதம்பணியும்
பார்மலி பூசைகள் பலசிறக்கப்
பாவலர் நாவலர் பதம்போற்றத்
தார்மலி மாலைகள் தாமசையத்
தாதுகு கொன்றைத் தருநீழற்
சீர்மலி தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

3. அரியய னிந்திர ஞனவர்க்கும்
ஆகுலந் தீர்த்திடு மபிராமி
பெரியவ ளரியவள் பேராட்டி
பேதகஞ் செய்திடும் பேயாட்டி
சுரிகுழ லுமைமவளர் சுந்தராங்கி
சூர்தடி யுஞ்சுடர் வாட்சூலி
தெரிவருந் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே

4. வருடந் தோறும் வருவிழாவில்
வாகாய்ப் பொலிவாய் வருபவளே
பெருமை பெறுந்தேர் மீதேறிப்
பேரின்ப மாயருள் பொழிபவளே
கருமை செம்மை கவினுறவே
கனிவாய்ச் செவ்வாய்க் கதிரவளாய்த்
திருவளர் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தூரிய மதுர சுரவேகந்
துள்ளு முயர்நா யனத்துவனி
சுரிமுகம் மேளந் தொடர்தாளந்
தூபந் தீபம் நைவேத்தியஞ்
சரிகை குங்கும சந்தனஞ்சேர்
சதாசிவ ரூப சௌந்தரமாந்
தெரிவை தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

6 ஆர்த்த பிறப்பறுத் தாள்நிதியே
ஆர்வல ரேத்து மாரணியே
கூர்த்த ஞானக் குளிரமுதே
கூவிடுங் கோகுலக் குரலமுதே
வார்த்த பசும்பொன் வனப்புருவே
வாய்மைத் தவர்க்காம் மணிவிளக்கே
தீர்த்தத் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

7. காரார் கயமுகக் கணபதியுங்
கதிர்வே லவனொடு வைரவருந்
தாரார் திருமால் சனீஸ்வரன்
தகவார் துர்க்கை நாகேஸ்வரி
பாரார் காத்தவ ராயரெனும்
பரிவா ரத்திரு மூர்த்தங்களுஞ்
சேரார் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

8. பூமலி கொன்றை பூச்சொரியப்
பூந்தா திறைத்து வேம்பசைய
மாமலி சோலை வாழைபலா
மகிழ்முக் கனிகள் வளஞ்சுரக்கத்
தூமணி மாடத் தாயிழையார்
தோத்தரித் தெடுக்குந் தூபதீபத்
தேமலி தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பொங்கற் குளிர்த்திப் பொன்னுளிற்
பொங்கல் படையல் பூக்குவியல்
எங்குந் தோன்றும் இரவுபகல்
எழிலார் கோலத் திருப்பவளே
பொங்கு தாமரை செங்கழுநீர்
பூக்குந் தடாகப் புனல்சூழுஞ்
செங்கட் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

10. முத்தொளிர் மேனி முத்துமாரி
மூளனல் காலும் முத்துமாரி
புத்தொளி பூக்கும் முத்துமாரி
பொழிபுனற் பொங்கலும் முத்துமாரி
வித்தொளிர் வேணி முத்துமாரி
விரைகழ லமுதும் முத்துமாரி
சித்தொளிர் தேவி முத்துமாரி
திருப்பொன் னூச லாடுகவே.

## எச்சரிக்கை

செங்கண் பூத்துச் சிவம்பூத்துச்
சிம்மத் திருப்பா ளெச்சரிக்கை
வெங்கண் மேயவர் விறலழித்து
வீறிட வைப்பா ளெச்சரிக்கை
பொங்குங் கண்கள் பூத்தொளிரப்
பூத்தேன் பூப்பா ளெச்சரிக்கை
மூங்குந் தண்ணருள் முத்துமாரி
மூவே முலகா ளெச்சரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

தேவ மாதர் திருமாதர்
　　தீபமங் களத்தாள் பராக்கு
பூவ தாரும் புவிமாதர்
　　பூங்கா வனத்தாள் பராக்கு
நாவ லாளர் நாநுனியில்
　　நயனுர் பதத்தாள் பராக்கு
மூவ ராகும் முத்துமாரி
　　மூதருள் முகிழ்ப்பாள் பராக்கு.

## லாலீ சுப லாலி

பூவளர் தாமப் புண்ணியத்தாள்
　　புகழ்வா ஞேராள் லாலீ சுப லாலி
தீவளர் யாகத் திருவிழியாள்
　　தீவளி புனலாள் லாலீ சுப லாலி
மீவளர் வேத மிகுவிசையாள்
　　மேதினி வாழ்வாள் லாலீ சுப லாலி
மூவள ஞான முத்துமாரி
　　மூதருள் வாழ்க லாலீ சுப லாலி.

வேறு

## வாழி


தீர்த்தமும் நீறுந் திருவைந் தெழுத்துஞ் சீலமும் வாழியவே
　　தீவளர் வேதியர் தீம்பா லானினந் திருமுறை வாழியவே
ஆர்த்தெழு மந்திர மருமறை யாகம மருந்தவம் வாழியவே
　　ஆதுலர் சாலைகள் அறநெறிச் சோலைகள் அறிஞர்கள்
　　　　வாழியவே
நேர்த்தி வளந்தரு நீள்புவி மாதர்கள் நிறைகற்பும் வாழியவே
　　நீதி நினைந்தெழு நேர்மைத் திறத்தவர் நீர்மையும்
　　　　வாழியவே
மூர்த்தியுங் கீர்த்தியும் மூவுல கும்வளர் மூமாரி வாழியவே
　　முருகுறழ் முத்து மூமாரித் தாயவள் மூதருள் வாழியவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

சீர்பொங்கு தெய்வச் சீர்மலியு மேசிங்காரந்
திகழீச திருமங் களம்
சிற்சபையில் நடனமிடு சிவகாமி மனமகிழு
சிவநாத திருமங் களம்
நீர்பொங்கு கங்கா நீர்தவழு நீலமயில்
நிறையீச திருமங் களம்
நெடுவான முகடளவி நீள்புவி காத்திடு
நிமிர்சூல திருமங் களம்
தார்பொங்கு தக்கனைத் தடிவீர பத்திரத்
தனிவீர திருமங் களம்
தாமரைத் தாயகத் தனமணி மார்பகந்
தளிர்மாய திருமங் களம்
மோர்பொங்கு நெய்தேன் முருகுறமு நெல்வேலி
முதுமாரி திருமங் களம்
மும்மூர்த்தி முத்துதிரு முகிழ்மாரி முத்தமிழ்
முகமாரி திருமங் களம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் போற்றிப் பத்து

இயற்றியவர்:
ச. தங்கமாமயிலோன்

1. ஓங்குநலந் திகழருளா யொளிர்வாய் போற்றி
ஒருவமை யொப்பில்லா வொருத்தி போற்றி
தாங்குபெருந் தாயாய தவமே போற்றி
தாவிலரு மின்னமுதந் தருவாய் போற்றி
ஏங்குமவர்க் கேக்கமற விசைப்பாய் போற்றி
ஏழுலகுந் தொழுதுய்ய வெழுவாய் போற்றி
தேங்கியசீர்த் தெய்வசிகா மணியே போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

2. பொன்மணிகள் பூத்திலங்கும் பொலிவே போற்றி
போகமயக் கொழித்தருளும் புகலே போற்றி
சொன்மணிகள் சேர்ந்திலங்குஞ் சுகமே போற்றி
சோதிவான் வெளிக்கவருஞ் சுடரே போற்றி
மின்னலிளஞ் செம்பவள முகத்தாய் போற்றி
மேதினிக்கு வாய்த்தபெரும் விளக்கே போற்றி
தின்னவருந் தெள்ளமுத மானாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி

3. குங்குமத்திற் சந்தனத்திற் குளிர்வாய் போற்றி
கோதிலமு தூறிவருங் கொழுந்தே போற்றி
பொங்குமிளஞ் சந்திரனாய்ப் பொலிவாய் போற்றி
புனிதமய மாயவுளம் பூப்பாய் போற்றி
மங்களத்தாய் மதிமுகத்தாய் மானே போற்றி
மரகதமா மணியான மயிலே போற்றி
தெங்கினிள நீரருவித் தேனே போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பூக்குந் தனத்திலுறை பூவே போற்றி
புகலருமைத் தவம்வளர்க்கும் புயலே போற்றி
போக்கும் வரவுமிலாப் புணர்வே போற்றி
புதியவற்றுட் புதிதாகும் புதிதே போற்றி
நோக்குந் திருக்களிக்கும் நோக்கே போற்றி
நூலறிவுக் கெட்டாத நுழைவே போற்றி
தேக்குஞ் செழுங்கருணைத் தேசே போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

5. நீராகி வெப்பொழிக்கும் நிழலே போற்றி
நிறைமாணில் நிறையாகும் நிறையே போற்றி
ஊராகி யூரவர்க்காம் உறவே போற்றி
ஊழூழிக் கெட்டாத வூழே போற்றி
ஏராகி யேற்றபொலத் தெழிலாய் போற்றி
ஏசற்ற காட்சியருக் கெளியாய் போற்றி
சீராகிச் சீர்மிகுக்குஞ் சீரே போற்றி
தேவி முத்து மாரியே போற்றி போற்றி.

6. ஆராத காதலொடும் அணைப்பாய் போற்றி
அணைத்தன்பை யநுதினமுந் தருவாய் போற்றி
ஓராதா ருள்ளொளிரா தொளிப்பாய் போற்றி
ஒளித்துள்ளம் நெக்குருகச் செய்வாய் போற்றி
பாராதே பார்வையெலாம் பார்ப்பாய் போற்றி
பார்ப்பவர்க்கும் பார்ப்பரிய பரமே போற்றி
சேராதே சேர்ந்திலங்குஞ் செழிப்பே போற்றி
தேவி முத்து மாரியே போற்றி போற்றி.

7. காடுகா ளாயவுயர் கவினே போற்றி
காவல்காத் தவராயர்க் களித்தாய் போற்றி
நீடுநா ளெல்லையின்றி நின்றாய் போற்றி
நீதிநெறி நின்றிலங்கும் நிதியே போற்றி
கூடுமா தவத்தவர்க்காங் கூர்ப்பே போற்றி
குலவியுளங் கொள்ளை கொளுங் குமரீ போற்றி
தேடுதா ளாயநலந் திகழ்வாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. விடுவிடெனும் வெம்பகைகள் வெல்வாய் போற்றி
வீரமொடு கல்விசெல்வந் தருவாய் போற்றி
கிடுகிடென மாமலைகள் கிழிப்பாய் போற்றி
கீதமிசை பாடிவருங் கிளியே போற்றி
சுடுசுடெனுஞ் சூலத்தாற் சுடுவாய் போற்றி
சுடர்வாளை வீசியறஞ் சூழ்வாய் போற்றி
திடுதிடெனத் தேவர்பயந் தீர்ப்பாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

9. நற்றவர்க்கும் நலஞய நலனே போற்றி
நவநிதியந் தருபுனித நதியே போற்றி
கற்றவர்க்குக் கனியான கனியே போற்றி
கவினூறு தமிழினிமை கலந்தாய் போற்றி
அற்றவர்க்கும் அருந்துணையா மன்னய் போற்றி
அம்மைநோய் தீர்த்தருளும் அமுதே போற்றி
செற்றவர்க்குஞ் செயலின்மை செய்வாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி

10, வின்மலிதோள் வேந்தர்க்காம் விறலே போற்றி
வீரசிம்மந் தனிலிவரும் வியனே போற்றி
கன்மனமுங் கரைந்துருகுங் கனலே போற்றி
காணக்கண் காட்டியருள் கண்ணே போற்றி
நன்மலரின் நறுமணத்தின் நலத்தாய் போற்றி
நாடெல்லாம் நயனேங்க நயப்பாய் போற்றி
சென்மவிடாய் தீர்த்தருளுந் தெளிவே போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

சுபம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# இன்பமே சூழ்க

# எல்லோரும் வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் முக்கிய விழாக்கள்

சித்திரை

வருடப்பிறப்பு

சித்திரைப்பூரம் – கும்பாபிஷேக தினம் சங்காபிஷேகமும் தண்டிகை உற்சவமும்

சித்திரா பௌர்ணமி – சுமங்கலி தீப பூசை

வைகாசி

பூரம் – உற்சவம்

விசாகம் – விசாகப்பொங்கல், உற்சவம், தீ மிதிப்பு

ஆனி

வருடாந்த மகோற்சவம்

பூரம் – இரதோற்சவம்

உத்தரம் – தீர்த்தோற்சவம்

ஆடி

ஆடிப்பூரம் – உற்சவம்

ஆடிச்செவ்வாய் – உற்சவம்

ஆடிவெள்ளிக்கிழமை – உற்சவம்

ஆவணி

விநாயக சதுர்த்தி – உற்சவம்

பூரம் – உற்சவம்

புரட்டாதி

பூரம் – உற்சவம்

நவராத்திரி – துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, ஆகிய முத்தேவியருக்கும் விசேட வழிபாடு உற்சவம்

மகிடா சூர சங்காரம்

விஜயதசமி – மானம்பூ உற்சவம்

ஐப்பசி

பூரம் – உற்சவம்

கேதார கௌரி விரதம் உற்சவம்

கந்தசஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை

திருக்கார்த்திகை

பூரம் உற்சவம்

மார்கழி

விநாயக சஷ்டி – உற்சவம்

பூரம் – உற்சவம்

திருவெம்பாவை – தினமும் காலையில் உற்சவமும் ஒன்பதாம் நாள் இரதோற்சவமும் பத்தாம் நாள் (திருவாதிரை) திருமஞ்சனத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்

வைகுண்ட ஏகாதசி– சந்தான கோபாலர் உற்சவம்

தை

தைப்பொங்கல்

தைப் பூசம்

தைப் பூரம் – உற்சவம்

தை அமாவாசை – அபிராமிப் பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்த தினம் – உற்சவம்

மாசி

மகம் இலட்சார்ச்சனை – பூர்த்திவிழா

பூரம் – உற்சவம்

சிவராத்திரி

பங்குனி

தினமும் அபிஷேக ஆராதனை – பங்குனித் திங்கள் உற்சவம்

புனர்பூசம் – துர்க்கை அம்மனைப் பிரதிஷ்டை செய்த தினம் அபிஷேகம் உற்சவம்

பூரம் – உற்சவம்

குறிப்பு

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மாலையிலும் துர்க்கை அம்மனுக்கு விசேட பூசை, வழிபாடு உற்சவமும் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந் நூலாசிரியர் திரு. வை. அ. மூர்த்தி அவர்கள் கடந்த
ரை நூற்றாண்டுக்கு மேலாக எழுத்துப் பணியில் ஈடுபட்டுள்ள
ந்த எழுத்தாளர். 'உதயம்' என்னும் இலக்கிய சஞ்சிகை
ன் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றியவர். சமயத்தொண்டர்
வி அமைப்பில் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றிய
டன் இந்து மன்றத்தின் தலைவராகவும் பணி புரிந்தார்
ழ்ப்பாணம் விவேகானந்த சபையின் பரீட்சைக் காரியதரிசி
மிழகத்தில் பத்தாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இவரது
டுரை இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

பாடசாலைகளிலும் பல்கலைக் கழக நிலையிலும் இந்துப்
பாட்டைப் பயில விரும்பும் இளந் தலைமுறையினருக்கு
த்தகைய வரலாற்று நூல்கள் பெரும்வரப் பிரசாதமாகும்

கலாநிதி ப. கோபாலகிருஸ்ணன்

இந்நூல் அருள் நெறியைக் காட்டும் ஒருவழி காட்டியாகும்
தனை ஆக்கியவர் அருள் பெற்றவர் ஆவர். இதனைக்
பவர்கள் அருள் பெறுவார்களாக.

பேராசிரியர் வி. க. கணேசலிங்கம்

அம்பிகையின் அருளால் அதிட்டிக்கப்பட்டு வெளிவரும்
வரலாற்று நூல் தலபுராணங்களின் வரிசையில் வைத்துக்
ணிக்கப்படுதற்குரியது. — வித்துவான் இ. திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org